# படகுசேவை சீர்கேடு; நெடுந்தீவில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
கொழும்பு

ஈழநாடு

EELANADU

மலர் 11
இதழ்:172

தபால் பெட்டி எண் 49
போன்: 389

National Tamil Daily

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆடி 19 ஐ: அவ் 18 ஞாயிற்றுக்கிழமை [3-8-69]

முக்கிய அறிவித்தல்

எங்கள் ஸ்தாபனத்தில் முன்பு கடமைபுரிந்த சிலர் போலி சோப்புகளை தந்து ஏமாற்றுவதாக அறிந்தோம். தயவுசெய்து எங்கள் லேபல்களை கவனித்து எங்கள் விற்பனை வாகனங்களில் வாங்கி வழமை போல் ஆதரவு தருமாறு வேண்டுகிறோம்.

மில்க்வைற்சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

## கச்சேரி முன் உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானம்

— நமது நெடுந்தீவு நிருபர் திருமதி எம். புஷ்பராணி —

நெடுந்தீவு குறிகாட்டுவான் படகுசேவைகடந்த இருவாரகாலமாக ஸ்தம்பித்துள்ளதை எதிர்த்து அங்கு ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நடைபெற்றது. நூற்றுக்கும் அதிகமான வாலிபர்கள் கலந்து கொண்ட இவ்வூர்வலத்தில் நெடுந்தீவு கிராமசபைத் தலைவர் திரு. அ.த. அம்பலம் உட்பட பல கிராமசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். படகுசேவையை உடனடியாக சீர்திருத்தி அமைக்குமாறு எழுதப்பட்ட சுலோகங்களை இவர்கள் வீதி வழியே எடுத்துச் சென்றனர்.

நெடுந்தீவில்வாழும்சுமார் எண்ணாயிரம் மக்களும் போக்குவரத்து வசதியும் தபால் போக்குவரத்துமின்றி அனுபவித்து ரும்வ கஷ்டங்கள் இம்மாதம் 5-ம் திகதிக்கு முன்னராக தீர்க்காவிட்டால் கச்சேரிக்கு முன் உண்ணாவிரதம் இருப்பதாக ஊர்வலத்தை தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிககப்பட்டது. தீர்மானம் தந்தி மூலம் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைககப்பட்டது.

இம் மாதம் 4ம் திகதி பிரயாணிகள் குழு அரசாங்க அதிபரை சந்தித்து தங்கள் கஷ்டங்களை எடுத்து விளககுவதெனவும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. தினமும் இரண்டு சேவை நடைபெறவேண்டுமென்றும் அரசாங்க அதிபரிடம் கேட்டுக கொண்டுள்ளனர்.

கூட்டத்தில கிராமசபைத் தலைவர் திரு. அம்பலம்

(4ம் பக்கம் பார்க்க)

### பாடப்புத்தகங்கள் கைத்தறி விலை குறைவு

### ★ சிகரட், அலங்கார பொருட்கள் விலை உயர்வு ★

### கூட்டுத்தாபன மூலம் 3கோடி லாபம்

# அத்தியாவசிய பொருட்களின் விலையில் மாற்றமில்லை

## அரசாங்க ஊழியருக்கு அக்.1 முதல் சம்பள உயர்வு
## புதிய வரவு-செலவுத்திட்டம்

கொழும்பு, ஞாயிறு

அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலை நேற்று சமர்ப்பிக்கப் பட்டநிதி அமைச்சரின் வரவு—செலவுத்திட்டத்தில் உயர்த்தப்படாத போதிலும், மோட்டார் வாகனங்கள், அலங்காரப் பொருட்கள், சிகரெட்டுகள் ஆகியவற்றின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு அக்டோபர் 1-ம் திகதி முதல் சம்பள நிர்ணயக் கமிஷனின் சிபார்சுகளின்படி சம்பள உயர்வு வழங்கப்படும்.

நேற்று தேசிய அரசாங்கத்தின் ஐந்தாவது வரவு—செலவுத்திட்டத் ... நிதி அமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயக்கா தமது வரவு—செலவுத்திட்ட உரையில், புதிய நிதியாண்டில் துண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குவங்கத்தில்

## 5 பொலிஸ்கான்ஸ்டபிள்கள் கைது செய்யப்பட்டனர்

புதுடில்லி, ஆகஸ்ட் 2

மேற்கு வங்க சட்டசபைக்குள் நுழைந்து அட்டகாசம் புரிந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில நான்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மேலும் பலர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன.

கடந்த வியாழக்கிழமையன்று மேற்கு வங்காளத்தில சட்டசபைக்குள் சுமார் 3 ஆயிரம் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் அத்துமீறி நுழைந்து நாற்காலிகளை உடைத்தும், டெலிபோன் கம்பிகளை அறுத்தும் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ...

வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டதில் ஒரு கான்ஸ்டபிள் மரணமானதையடுத்து இந்தக் கலவரங்கள் இடம் பெற்றன. இதன்காரணமாகவே நான்கு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பதவியிலிருந்து விலக்கப்பட்டிருப்பதுடன் கைது செய்யப்பட்டும் இருக்கிறார்கள்.

இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து அசம்பாவிதங்கள் ஏற்படாமலிருக்க ராணுவம் உஷார்படுத்தப்பட்டிருக்கின்றது.

## இரியகொல்லையின் இந்தியப் பயணம்

கோட்டை, சனி

இந்திய அரசாங்கத்தின் மேலதிக உபகாரச்சம்பளம் பெற்று இந்தியாவில் உயர் கல்வி பெற்றுக கொண்டிருக்கும் கல்வி அமைச்சரின் புதல்வியான செல்வி சகாரிகா இரியகொல்லை சுகவீனமுற்றிருப்பதாகவும், அவரை இங்கு அழைத்துவர கல்வி அமைச்சர் இந்தியா செல்லவிருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்திய அரசாங்கத்தின் உபகாரச்சம்பளம் கல்வி அமைச்சரின் மகளுக்கு எவ்வாறு கிடைத்ததென்பது பாதுகாப்பு வெளி விவகார அமைச்சுக்கே தெரியாதென்றும், இதுபற்றிய சர்ச்சை இப்போது எழுப்பப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

சிறுபான்மை தமிழர் மகாசபையினர்

## யாழ். கச்சேரி முன்னால் உண்ணாவிரதம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சவ சமய மக்கள் அனைவருக்கும் ஆலயங்களைத் திறந்துவிடுமாறும், சகல சாதிவேற்றுமைகளையும் அகற்றி மனித உரிமைகளை நிலை நிறுத்துமாறும் கோரி அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையைச் சேர்ந்த ஐவர் நேற்று முதல் உண்ணாவிரதத்தில் இறங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் கச்சேரி முன்னால் நடைபெறும் இவ் உண்ணாவிரதத்தில் மகாசபைத் தலைவரான திரு. எம். சி. சுப்பிரமணியம், நிர்வாகச் செயலாளர் திரு. எஸ். செல்லையா, பொருளாளர் திரு. எஸ். இராசையா, உரும்பராய் பட்டின சபை உறுப்பினர் திரு. கே. தவஞானம், திரு. என். எஸ். அப்புத்துரை ஆகியோர் கலந்துள்ளனர்.

'ஆண்டவன் சந்நிதானத்தில் அனைவரும் சமம்', 'திக்கெட்டும் தீண்டாமை ஒழியட்டும்', 'சைவபெருமக்கள் இந்து மாமன்றத்தின் வழியைப் பின்பற்றவேண்டும்' என்று எழுதப்பட்ட சுலோகங்கள் இவர்களுக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ளன.

பின்வரும் மூன்று அம்சங்களையும் நிறைவேற்றுவதாக ...

கடுழியச் சிறைத்தண்டனை வழங்கவேண்டும்.

★ சிறுபான்மைத் தமிழரின் சமூக, கல்வி, பொருளாதார, கலாச்சார, வளர்ச்சியில் நடக்கும் பாகுபாட்டை நீக்க ஒரு கமிஷனை நியமிக்கவேண்டும்.

வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்று மாலை உண்ணாவிரதகாரர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பிரான்சிஸ் பீட்டர்ஸ் இது விஷயத்தைதலைமை அமைச்சுக்குத் தெரிவித்துள்ளார்.

பல சிங்களப் பிரதிநிதிகளும் உண்ணாவிரதமிருப்பவர்களை நேற்றுச் சென்று சார்வையிட்டனர். இடதுசாரிப்பிரமுகரான திரு அ. விசுவநாதன் இவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். (கா. நி.)

## ருமேனியாவில் நிக்சன் தம்பதிகள்

புக்காரெஸ்ட், ஆகஸ்ட் 2

அமெரிக்க ஜனாதிபதி திரு நிச்சர்ட் நிக்சனும், துணைவியாரும் லாகூரிலிருந்து ருமேனியாவின் தலைநகரான புக்காரெஸ்ட் வந்து சேர்ந் ...

3 ஆயிரம் பொலிஸ் கான்ஸடபிள்கள் அத்துமீறி நுழைந்து நாற்காலிகளை உடைத்தும், டெலிபோன் கம்பிகளை அறுத்தும் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். சட்டசபை அங்கத்தவர்கள் சிலரும் தாக்கப்பட்டார்கள். மந்திரிகள் ஓடிப்போய் தங்களின் அறைகளில ஒளித்துக்கொண்டார்கள். சபாநாயகர் ஜன்னல வழியாக குதித்து ஓடி தப்பிவிட்டார், பொலிஸ் கான்ஸடபிள்கள், பொலிஸ் மந்திரியும் உதவி முதலவருமான திரு. ஜோதி பாசுவுக்கு எதிராக கோஷமிட்டார்கள்.

கிராமமொன்றில் பொலிஸ் கோஷ்டியொன்று

கள் ஏற்படாமலிருக்க ராணுவம் உஷார்படுத்தப்பட்டிருக்கின்றது.

பாதுகாப்பு வெளி விவகார அமைச்சுக்கே தெரியாதென்றும், இதுபற்றிய சர்ச்சை இப்போது எழுப்பப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

## 107 பேர் மாண்டனர்

லண்டன், ஆக. 2

தென்கொரியாவில்பெய்த பெருமழையினாலும், நிலச்சரிவினாலும் 104 பேர் கொல்லப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இப்போது மீட்பு வேலைகள் நடைபெறுகின்றன.

## நேர்முகப்பரீட்சை

அளவெட்டி, சனி

புதிதாக ஆரம்பிக்கப் பட்டுள்ள குப்பிழான் உபதபால் நிலைய அதிபருக்கான நேர்முகப்பரீட்சை அடுத்தமாதம் 3-ம்திகதியாழ்மத்தியதபால் நிலையத்தில் நடைபெறவுள்ளது இதற்கு சுமார் 12 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

### யாழ்-பருத்தித்துறை டிப்போ ஊழியர்களுடன்

# காரைநகர் இ. போ. ச. ஊழியர்களும் நேற்று வேலைநிறுத்தத்தில் குதித்தனர்

### வடக்கில் பஸ்சேவை முற்றுக பாதிப்பு பிரயாணிகள் அவதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

மூன்ருவது தினமாக இன்று தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணம், பருத்நித்துறை இ போ.ச.டிப்போ ஊழியர்களின் வேலை நிறுத்தத்தில் காரைநகர் டிப்போ ஊழியர்களும் நேற்றுக் கலந்து கொண்டனர். வேலை நிறுத்தம் செய்வோர் தொகை சுமார் 1.00 ஆக அதிகரித்துள்ளதாகவும், சுமார் 180 பஸ்கள் ஓடாமல் நிற்பதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

வடபகுதியின் சகல பகுதி பஸ்களும் முற்றுக ஸ்தம்பிதமாகியுள்ளன. எனினும் வேறு ஊழியர்களைக் கொண்டு சில பகுதி பஸ் சேவைகள் பொலிஸ் பாதுகாப்புடன் நேற்று நடைபெற்றதைக் காணக் கூடியதாக விருந்தது.

### 1200 ஊழியர் வேலைநிறுத்தம்

அகிலஇலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம் இலங்கை பஸ்தொழிலாளர் கழகம் ஆகியன் உட்பட பல தொழிற்சங்க ஊழியர்களுமாக சுமார் 1200 ஊழியர் தொடர்ந்து வேலை நிறுத்தம்செய்துவருவ தாகவும், கோண்டாவில் பருத்தித்துறை டிப்போ 'மெக்கானிக்கர்களும் 'நேற்று நண்பகல் முதல் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளதாக மோட்டார் தொழிலாளர் சங்க வடபிரதேச பிரதிநிதி திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் நேற்றுத் தெரிவித்தார்.

### குறுகிய பஸ் சேவைகள்

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட சில ஊழியர்கள் வேலைக்குத் திரும்பியுள்ள தாகவும், இவர்களைக் கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னுகம், மானிப்பாய். கச்சேரி, கோப்பாய் வரையான பஸ் சேவைகள் நடத்தப்படுவதாகவும், இன்னும் சிலர் வேலைக்குத் திரும்ப அறிவித்துள்ளதாகவும் வடபிரதேச இ.போ.ச. முகாமையாளர் திரு. கே. ஆர். வேலுப்பிள்ளை தெரிவித்தார்.

வேலைநிறுத்தம் சம்பந்தமான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான அதிகாரத்தை இ. போ. ச. பொதுமுகாமையாளர் திரு. ஈ. பி. டி. சேரம் வடபிரதேச முகாமையாளர் திரு. ஆர், வேலுப்பிள்ளையிடம் வழங்கியுள்ளார்.

### வேலைநிறுத்த காரணம்

பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த மூன்று தொழிற்சங்கத் தலைவர்கள் உடனடியாக எல்பிட்டியாவுக்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டதும், கோண்டாவில் டிப்போவைச் சேர்ந்த ஓர் ஊழியர் திடீரென அனுரதபுரத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டதும்தான் இந்த வேலை நிறுத்தத்திற்கு காரணம் என்று ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

பிரயாணிகள், பஸ்கள் எதுவுமின்றி யாழ். பஸ்நிலையம் கடந்த இரண்டு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

## பஸ்ஸுக்கு எறிகுண்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

புன்னாலைக்கட்டுவனில் வைத்து ஓடிக் கொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்றுக்கு கற்களும் எறிகுண்டுகளும் நேற்று வீசப்பட்டன. பஸ்ஸில் பிரயாணம் செய்த ஒருவரும் காயமடையாத போதும் பஸ்ஸின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது.

சாவகச்சேரிக்கும் புன்னாலைக்கட்டுவனுக்கு மிடையே ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸுக்கே இவ்வாறு வீசப்பட்டது. (கா.நி)

ணயக் கமிஷனின் சிபார்சுகளின்படி சம்பள உயர்வு வழங்கப்படும்.

நேற்று தேசிய அரசாங்கத்தின் ஐந்தாவது வரவு—செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்த நிதி அமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயக்கா தமது வரவு—செலவுத்திட்ட உரையில், புதிய நிதியாண்டில் துண்டு விழும் தொகையான 114 கோடி 60 லட்சம் ரூபாயில் ஒரு பகுதியைச் சமாளிப்பதற்கான திட்டங்களை வெளியிட்டார்.

சிகரெட் உற்பத்திக்குப் புதிய வரி விதிக்கப்பட்டுள்ளது. உற்பத்தியாளர்களுக்கு 5 வீத வரியும், விற்பனையாளர்களுக்கு 1 வீத வரியும் விதிக்கப்பட்டுள்ளது

துண்டுவிழும் தொகையில் 10 கோடி ரூபாயை அரசாங்கக் கூட்டுத்தாபனத்தின் மூலம் கிடைத்த பணத்திலிருந்தும், ஏற்றுமதிப் பொருட்களுக்கும் வேறு சிலவற்றுக்கும் விதிக்கப்பட்ட வரிகள் மூலமும் பெற்றுக்கொள்ளலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மூலம் 3 கோடி ரூபாய் அரசாங்கத்துக்குக்கிடைத்துள்ளது. ஏற்றுமதிப் பொருட்களின் புதிய வரிகள் மூலம் 2 கோடி ரூபாய் லாபமும், தொலைபேசி தொடர்புக் கட்டண உயர்வின் மூலம் 60 லட்சம் ரூபாயும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

துண்டுவிழும் தொகையில் ஒரு பகுதியைச் சமாளித்து உதவ அரசாங்கத்துக்கு வங்கிகள் 8 கோடி 40 லட்சம் ரூபாவைக் கொடுத்துதவவுள்ளன. கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் 2 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

பெற்ரேல், மண்ணெண்ணை ஆகியவற்றுக்கு எவ்வித புதிய வரியும் விதிக்கப்படவில்லை பாடசாலைப் புத்தகங்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

## ஒளிமயமானது

பொருளாதாரத்துறையில் 1968-ம் ஆண்டு ஒளிமயமானது எனக் குறிப்பிட்ட நிதி மந்திரி, அரசாங்க கைத்தொழில கூட்டுதாபனங்கள் 26 கோடியே 26லட்சம் ரூபாயைலாபமாகப் பெற்றுள்ளன வென்று தெரிவித்தார்.

பொருளாதாரத்துறையில் 8.3 விகித வளர்ச்சியை நமது நாடு கண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். நாட்சம்பளத்தில் இருந்த பல அரசாங்க ஊழியர்கள் இப்பேது நிரந்தர மாதச்சம்பளத்தைப் பெற்று வருகின்றனரென்றும் அமைச் சுட்டிக்காட்டினார்

ஆயுதம் தாங்கிய படையினரின் சம்பளம் பற்றி விசாரணை செய்ய கமிஷன் ஒன்றும் நியமிக்கப்படுமென்றும் ஸ்தல ஸ்தாபன ஊழியரின் சம்பள உயர்வு பற்றி பரிசீலனை செய்யப்படும் என்றும் பென்ஷனியர்களின் விஷயத்திலும் கவனம் செலுத்துமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

### கைத்தறித்துணிகள் விலைகுறையும்

கைத்தறித்துணிகள் விலையும் குடிசைக் கைத்தொழிலாக தயாரிக்கப்படும் இனிப்பு விஸ்கோத்து ஆகியவற்றின் விலையும் முன்னரிலும்பார்க்க குறைக்கப்படவுள்ளது. கூட்டுறவுவிற்பனவு மூலம் செய்யப்படும் கைத்தறித்துணிகளின் விலை 5 வீதத்திலிருந்து 1 வீதமாகக் குறைக்கப்படுகிறது. தனிப்பட்டவர்களின் உற்பத்திவிலையில் மாற்றமில்லை.

யந்திரமில்லாத உபகரணங்களால் செய்யப்படும்

## ஆலய கதவுகளைத்திறக்க பொலிஸாருக்கு அதிகாரமில்லை'

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் கதவுகள் மூடப்பட்டிருப்பதை பொலிஸாரால் திறந்துவிடமுடியாது என்றும், சிவில் சட்டத்தின்படி பொலிஸாருககு அதிகாரம் இல்லையென்றும் பொலிஸ் சுப்பிரீடண்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்றுத்தெரிவித்தார்.

அட்டர்னி ஜெனரல் இந்தத் தகவலை பொலிஸ்இன்ஸ்பெகடர் ஜெனரல் திரு. அலரிக அபயகுணவர்த்தனவுக்குத் தெரிவித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மலாகம் நீதிமன்றத்தில் செய்யப்பட்ட மாவிட்டபுரம் ஆலய ஒப்பந்தம் பற்றி உயர்தர பொலிஸ் அதிகாரிகள் நேற்று முன்தினம் கொழும்பில்கூடி ஆராய்ந்தனர். கனவான்கள் ஒப்பந்தத்தை ஒரு சாரார் மீறி நடந்துகொள்ளும்போதும் அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்க முடியாதிருப்பதாக இங்கு தெரிவிக்கப்பட்டது.

எனினும் ஏற்கனவே கோவிலுக்குள் சென்று வணங்கி வந்தவர்கள் ஆலயக் கதவுகள் மூடப்பட்டதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தால் அதற்குப் பொலிஸார் அனுசரணையாகவிருப்பார்கள் என்றும் ஒரு பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். (கா. நி,)

என்று எழுதப்பட்ட சுலோகங்கள் இவர்களுக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ளன.

பின்வரும் மூன்று அம்சங்களையும் நிறைவேற்றுவதாக பிரதம மந்திரி வாக்குறுதி கொடுக்கவேண்டும் என்று கோரி இவர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளதாக இஞ்த இயக்கத்தலைவர் திரு எம். செல்லையா விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

★ நான்கு மாதங்களுக்கிடையில் சமூக குறைபாட்டு ஒழிப்புச் சட்டத்தில் செய்யவேண்டிய திருத்தங்களை, சிறுபான்மைத் தமிழர் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து திருத்தம் செய்வதோடு, இதற்கு எதிரான குற்றம் புரிபவர்களுக்கு குறைந்தது ஐந்தாண்டாவது சிறைத் தண்டனை வழங்கவேண்டும்.

★ இந்து சமய ஆலயகளைப் பூட்டிவைத்தால் ஆலய பரிபாலகர், முகாமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நோக்கமாக சட்டம் இயற்றுவதோடு, இதைமீறினல்

புக்காரெஸ்ட், ஆகஸ்ட் 2

அமெரிக்க ஜனாதிபதி திரு றிச்சர்ட் நிக்சனும், துணைவியாரும் லாகூரிலிருந்து ரூமேனியாவின் தலைநகரான புக்காரெஸ்ட் வந்து சேர்ந்தார்கள் இன்று பிற்பகல் இவர்கள் வந்து சேர்ந்த போது, சுமார் ஐயாயிரம் மக்கள் விமானநிலையத்தில் கூடிநின்று வரவேற்றனர். ரூமேனியா அதிபர் இருவரையும் வரவேற்றார்.

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு ஒரு கம்யூனிஸ்ட் நாட்டுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

அமெரிக்க ஜனாதிபதி திரு. நிக்ஸன் விமான நிலையத்தில் உரை நிகழ்த்தினர்.

''நம் இரு நாடுகளும் நட்புறவாக வாழ்வதற்கு கொள்கை வேறு பாடுகள் குறுக்கிடக்கூடாது. மனம் விட்டு இரு நாடுகளும் தொடர்பு கொள்வதால் முற்றுக மாறுபட்ட பொருளாதாரக் கொள்கையையும் அமைப்பையும் கொண்ட நம்மிருநாடுகளும் அமைதியாக வாழமுடியும்', என்று நிக்ஸன் கூறினர்.

### ஆனையிறவில் பட்டப்பகலில் நடந்தது

# லொறிமோதி இருவர்மாண்டனர்; மற்றிருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆனையிறவில் நேற்று முன்தினம் நண்பகல் நடைபெற்ற பயங்கர லொறி விபத்தொன்றில் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். மற்ருருவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானுர். இன்னும் இருவர் அபாயகரமான நிலையில் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனையிறவு தமிழ்ப் பாடசாலைக்கு முன்னல் இவ் விபத்து நடைபெற்றதாக வடபகுதிப் பொலிஸ் தலைமைக்காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த வல்லிபுரம்என்பவர் ஸ்தலத்திலும், குழந்தைவேலு என்பவர் ஆஸ்பத்திரியிலும் மரணமானுர்கள். பஞ்சலிங்கம், சோமலிங்கம் ஆகிய இருவருமே யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் படுகாயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

மரணமானவர்களும், படுகாயமடைந்தவர்களும் வீதிக்கருகாமையில் கூட்டமாகக் கதைத்துக்கொண்டு நின்றதாகவும், மண்ணெண்ணைத் தகரங்களுடன் வந்த லொறி இவர்களை மோதியதாகவும், இச்சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் 11-45க்கு நடைபெற்றதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

லொறிச் சாரதியான க. மகாலிங்கம் என்பவர் கிளிநொச்சிப் பொலிஸில் பாதுகாப்பில் வைக்கப்பட்டார். நேற்று ஸ்தல விசாரணை நடைபெற்றது. இறந்தவர்களது சடலங்கள் நேற்று பிரேதபரிசோதனை செய்யப்பட்டன.

கிளிநொச்சி உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் எஸ். பி. டி. சில்வா விசாரணை நடத்திவருகின்றூர். (கா.நி)

## மரண அறிவித்தல்

பி. சவிரிமுத்து

யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய திரு. பி. சவிரிமுத்து (எம். ஏ. டிப்ளோமா எடியுக்கேஷன் ல்ண்டன்) அவர்கள் காலமாகிவிட்டார். அவர் கிறேஸ் என்பவருடைய அன்புக்கணவரும், றீற்ரு (எச். ஒ. மட்டக்களப்பு), திரேசா (வைத்திய மாணவி பேராதனை), கஸில்டா, எலிசபெத், அன்ரன், பிலிப், பேர்லின், ஜயசிந்தா ஆகியோரின் அருமைப் பிதாவும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 3-8-69 ஞாயிறு வாரம் இன்று சாயந்திரம் யாழ். ஆசனக்கோவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். அன்று மாலை 4 30 மணிக்கு யாழ்ப்பாணம் 18 டேவிற் வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து பிரேத ஊர்வலம் புறப்படும். 1434

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### கல்வி

காலைநேர வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஜி.சி.ஈ. (சாதாரணம்) விஞ்ஞானம், கலை, ஜி.சி.ஈ. (உயர்தரம்) கலைப்பிரிவு. சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், வர்த்தகம் பொருளாதாரம், விசேஷ ஆங்கிலம், சிங்களம். யூனைட்டட் இன்ஸ்டிடியூட்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 1291

மெக்கானிக் பாடங்கள்:

29-8-69 தொடக்கம் ஆரம்பமாகவிருக்கும் எமது ஏழாவது ஒரு வருட முழுநேர மோட்டார், டிராக்டர், டீசல் பயிற்சி வகுப்புகளுக்கும் துரித சாரதிப் பயிற்சி வகுப்புகளுக்கும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சேர விரும்புவோர் உடன் விண்ணப்பிக்கவும். அன்றி நேரில் தொடர்பு கொள்ளவும். அதிபர் ஸ்ரீராஜ் ஒட்டோமோபைல் என்ஜினியரிங் நிறுவனம், 11A / 11 B, மொம்சாக் மாளிகை மேல்பாடி, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 1286

### தேவை

யாழ்ப்பாணம்மெயின் வீதியிலுள்ள ஒரு பூக்கடையை நிர்வகிக்கும் திறமையுள்ள ஒருஆள்தேவை கொண்டைமாலை, பூமாலை, பூசெண்டு, மலர்வளையம் முதலியன செய்வதில் அனுபவமுள்ளவராக இருக்கவேண்டும். பிணைப்பணம் ரூ. 250/- சம்பளம் மாதம் ரூ. 125/- கொடுக்கப்படும். முடிவு தேதி 15-8-69. தொடர்பு:- பொ. சுப்பிரமணியம் 6/3 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். 1290

## நாளுக்குநாள் அதிகரிக்கிறது

ஊர்காவற்றுறை, ஞாயிறு

புளியங்கூடல் சந்தியில் சூதாட்டக்காரரினதும் குடிகாரரினதும் தொல்லை நாளுக்குநாள் அதிகரித்து வருவதனால் பொதுமக்கள் குறிப்பாக இச் சந்திக்கு பஸ்ஸுக்காக காத்து நிற்பவர்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாக வேண்டியுள்ளது.

## தாய்-சேய் உடல்நலப்போட்டி முடிவுகள்

பருத்தித்துறை, ஞாயிறு

வடமராட்சி சுகாதாரப் பகுதியினரால் நடாத்தப்பட்ட தாய்-சேய் உடல் நலம் என்னும் விடயத்தை மூலப் பொருளாகக் கொண்ட பாட்டு, நடனப் போட்டிகளில் கட்டைவேலி ஞானசாரியர் கல்லூரி முதலிரு இடங்களையும், பாட்டில் இரண்டாம் இடத்தை வதிரி தெற்கு றோமன் கத்தோலிக்க பாடசாலையும், மூன்றும் இடத்தை சரஸ்வதி விதாலயமும்பெற்றன. நடன நிகழ்ச்சியில் இரண்டாம் இடத்தை கரவெட்டி சரஸ்வதி விதாலயமும், மூன்றும் இடத்தை வதிரி றோ. க. பாடசாலையும் பெற்றன.

வெற்றிபெற்ற பாடசாலைகளுக்கும் இம்மாதம் 4-ம் திகதி சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா நெல்லியடி மகாவித்தியாலயத்தில் பரிசுகள் வழங்குவார்.

### ச. ச. நிலையங்களுக்கு நன்கொடை

அராலி, ஞாயிறு

1967-68ம் ஆண்டிற்குரிய அரசாங்க நன்கொடைப் பணம் இப்பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களுக்கு வலி-மேற்கு காரியாதிகாரியால் வழங்கப்பட்டுள்ளது.

நன்கொடைப் பணம் இப்பொழுது பணமாக நேரிற் கொடுபடுவதில்லையென்பதும் ஒவ்வொரு சங்கமும் தபாற் கந்தோர் வங்கியில் சேமிப்பு பணமாக இப்பணத்தை வைத்து பாஸ் புத்தகங்கள் காரியாதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் இப்போது விதியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இப் புஸ்தகங்கள் பணம் போடப்பட்ட பின் சங்கத்திடம் ஒப்படைக்கப்படும்.

### தவறுதலாககுடித்தவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தவறுதலாக டி. டி. ரி மருந்தைக் குடித்த நல்லூரைச் சேர்ந்த க. நடராஜா என்பவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார். (கா. நி)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 3—8—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 49 மீ**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 61 மீ**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 கிராமியப் பாடல்கள், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 தாளவாத்தியக்கச்சேரி, 7-35 மத்தாப்பு, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-30 இசைச்சித்திரம், 9-15 இடைவேளைஇசை, 9-30 இசைச்சித்திரம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## தந்திக் கம்பி களவு

அளவெட்டி, ஞாயிறு

வீதியிலிருந்த தந்திக்கம்பத்தின் கம்பி வெட்டிக் களவாடப்பட்டுள்ளதாம்

இடைக்காட்டுப் பகுதியில் உள்ள தந்திக் கம்பங்களில் இருந்து இனந்தெரியாத நபர்களால் 80 ருதல் கம்பிகள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளதாக தந்தி பொறியியலாளர்கள் காங்கேசன்துறை பொலிசில புகார்செய்துள்ளனர். இதை அடுத்து பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

## சுகாதாரவார சிரமதானம்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை மந்திகை அரசினர் வைத்தியசாலை, வல்வெட்டித்துறை இந்திராணி வைத்தியசாலை, கரவெட்டி மருத்துவமனை, செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் ஆகிய இடங்களில் பருத்தித்துறை மெதடிஸ்த்

# 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மரணமடைவது அதிகரித்து வருகின்றது

## யாழ். நகரவைத்திய அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"கர்ப்பம் என்பது ஒரு நோய் என்று கணிக்கப்படாவிட்டாலும் கூட, ஒரு கர்ப்பிணித் தாய் தன்னை ஒத்த ஏனையோரிலும் பார்க்கக் கூடுதலான ஒரு ஜீவமோசத்தை எதிர் நோக்குபர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அதுபோல குழந்தைகளும் எமது நாட்டில் மட்டுமன்றி எங்கும் ஒரு வயது தொடக்கம் 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளே கூடுதலான மரணமடைகின்றார்கள். கர்ப்பிணிகள்குழந்தைகள், பாலர்களது இம் மரணங்களைத் தடுக்கவே இந்த விசேஷ சேவைகளை யாழ் மாநகர சபை அளிக்கின்றது"

5-ம் வட்டாரத்தில் நேற்று முன்தினம் கர்ப்பிணி, குழந்தைகள் சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டபோது யாழ். மாநகரசபை வைத்திய அதிகாரி திரு. வி. நடராஜா பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

ஜுபிலி கட்டடத்தில் இதனைத் திறந்து வைத்த நகர முதல்வர் திரு. எஸ். நாகராஜா பேசுகையில் சட்டம் மூலம் தான் மக்களை அடிபணியச் செய்து ஆட்சி நடத்த வேண்டும் என்ற நியதி இல்லையென்றும் குறிப்பிட்டதோடு இக்கட்டடத்தை நிறுவிய யாழ்ப்பாணம் சுகாதார சம்மேளனத்தினருக்கும் நன்றியும் தெரிவித்தார்.

வைத்திய அதிகாரி திரு. வி. நடராஜா மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

தனது குடிமக்களுக்கு தடுப்புச் சுகாதார சேவைகளை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு யாழ்ப்பாண மாநகர சபையைச் சேர்ந்ததாகும் இப் பொறுப்பை நிறைவேற்றும் வகையில் காலத்துக்குக் காலம் பல சுகாதார நடவடிக்கைகளை இந்தச் சபை எடுத்துவருகின்றது. முன்னேற்றத்துக்கான அதன நிகழ்ச்சித் திட்டத்தில் மிக முக்கியமான சேவைகளில் ஒன்றாக கர்ப்பிணிகள் குழந்தைகள் நல சேவைக இருந்து வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் நகரின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்கனவே 5 பிரசவ விடுதிகளும், கர்ப்பிணிகள் குழந்தைகள் சிகிச்சை நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. அதன் வரிசையில் இது ஆறாவது நிலையமாகும் என்றும் குறிப்பிட்டார்.

திருமதி அந்தோனியா சாமிநாதர் பேசுகையில், விசேஷ ஆணையாளர்கள் ஆட்சியில் சர்வாதிகாரத் திணிப்பில் தத்தளித்த யாழ். நகர மக்கள் இன்று மக்கள் பிரதிநிதிகள் ஆட்சியில்சுபீட்சமடைகின்றார்கள் என்றார்.

திரு. எஸ் ஜே. அன்ரனி, திருமதி செபஸ்தியாம்பிள்ளை ஆகியோர் உட்பட இன்னும் பலர் பேசினார்கள். (கா. நி)

# இன்றைய பலன்

-சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை-

ஆடி மாதம் 19-ந் திகதி (3-8-69)

**மேஷம்**- குடும்பவிவகாரங்களில் அமைதி தென்படும் உடல் நலனில் அபிவிருத்தி ஏற்படும். பூர்வீகச் சொத்து சம்பந்தமாக நல்ல முடிவு உருவாகும். பெரியவர் ஒருவரின் துணை புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும். சிறப்பான தினம்.

**ரிஷபம்**- அன்னியர்களின் உறவின் மூலம் ஆபத்து ஏற்படலாம். புதிய தொடர்புகளை இன்று தாமதப்படுத்தவும். பிரிவுத்துயர் உங்களை வாட்டக்கூடும். இன்று பின் தங்கியநிலையிலேயே இருப்பீர்கள். அமைதி நன்று.

**மிதுனம்**- அறிவுத்தாகம் மேலிடும். அறிஞர்கள் ஆதரவு கிடைக்கும். புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபடுவீர்கள். விடாமுயற்சியின் மூலம் தனவரவுக்கு இடமுண்டு. நீண்டநாள் பிணி நிவர்த்தியாவதற்கும் இடமுண்டு.

**கடகம்**- சுற்றுவட்டாரத்தில் மதிப்பு உயரும். இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு. நடுநிலை நின்று நல்லதைச் செய்து முடிப்பீர்கள் இன்பத்தின் அணைப்பு இன்று இறுக்கமாக இருக்கும்.

**சிம்மம்**- திடீர் மாற்றங்கள் மூலம் திகைப்பில் மூழ்குவீர்கள். பின்னணியில் பகைமூட்டம் உருவாகும். கொடுக்கல் வாங்கல் மூலம் பிணக்குகள் தோன்றக் கூடும். முன்யோசனையுடன் செயலாற்றுக.

**கன்னி**- நீண்டநாள் எதிர்பார்த்த இன்பமான சூழ்நிலை தென்படும். இனிப்பூட்டும் செய்தியொன்றும் இன்று வெளியிடத்தில் இருந்து கிடைக்கும். காதல் உலகில் சஞ்சரிப்பவர்களுக்குக் களிப்பூட்டும் சம்பவங்கள் உண்டு.

**துலாம்**- பக்கபலமாக நின்றவர்கள் பதுங்கிக்கொள்ளுவார்கள். நடுவழியில் திண்டாடவேண்டிய நிலைமை ஏற்படலாம். பிள்ளையின் பிடிவாதப் போக்கு மனதில் குழப்பத்தைத் தரும். குறைகேட்பதற்கும் இடமுண்டு.

**விருச்சிகம்**- தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும். புண்ணிய ஸ்தல யாத்திரை குறித்து ஆலோசிக்கப்படலாம். தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். [illegible] இடமுண்டு.

**தனுசு**- [illegible] முன்னணிக்கு வருவீர்கள். உங்கள் திறமையை மற்றவர்கள் வரவேற்பார்கள்.

## சுழிபுரம் கி.ச. கோரிக்கை

சுழிபுரம் ஞாயிறு

தமிழ் பகுதிகளில் குறைந்தது மூன்று வட்டார விவசாய கல்வி அலுவலக அதிகாரிகளை உடன் நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு உணவு விவசாய அமைச்சரைக்கோரும் ஓர் தீர்மானம் சுழிபுரம் கிராமசபையினரால் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஏனைய பகுதிகளுக்கு நியமனம் செய்தும், தமிழ் பகுதிகள் புறக்கணிக்கப்பட்டதன் மர்மம்யாது என்பதும் சுட்டிக்காண்பிக்கப் பட்டுள்ளது.

## 4-வது ஆண்டு விழா

புலோலி, ஞாயிறு

யாழ் பிரதேசக கலா மன்றத்தின் ஆதரவில வரணிக கலா மன்றத்தின் நான்காவதாண்டு விழா இடைக குறிச்சி சாவிலிப்பிட்டி கந்தசுவாமி கோயில முன்றலில இம்மாதம் 4-ம், 5-ம் திகதிகளில நடைபெறவுள்ளது. விழாவில இடம்பெறும் நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி அஞ்சல செய்யவுள்ளது.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபரும், யாழ் பிரதேச கலாமன்றத் தலைவருமான திரு. எப். ஸி. பீற்றேர்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில இலங்கைப்பலகலைகழக தமிழ்த்துறைவிரிவுரையாளர் கலாநிதி. எஸ் வித்தியானந்தன், சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவ

# 'பஸ் பிரயாணிகள் மன வேதனை'

அராலி, ஞாயிறு

"பஸ் சேவை மக்களுக்கு அத்தியா வசியமானதாகப் பழக்கிவிட்டு, திடுதிப்பென சேவையை நிறுத்தி ஏமாற்றத்தையும் மன வேதனையையும் உண்டுபண்ணுவது ஒரு நாகரிகமற்ற செயலாகும்" என அராலி பஸ் பிரயாணிகள் சங்கக் காரியதரிசி யாழ். பிராந்திய மனேஜருக்கு எழுதிய கடிதமொன்றில் இப்போது நடைபெற்றுவரும் பஸ்ஊழியர் வேலைநிறுத்தம்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்

"பருத்தித்துறை பஸ்டிப்போ ஊழியர் தாம் வேலைநிறுத்தத்திலிறங்கப் போவதாக முன்னெச்சரிக்கை கொடுத்திருந்ததாக, பத்திரிகை வாயிலாக அறிந்திருந்தோம். ஆனால் காரைநகர் டிப்போபஸ்ஊழியர் ஒருதினமாயினும் ஒடிவிட்டு வேலைநிறுத்தஞ் செய்தார்கள். கோண்டாவில்டிப்போ ஊழியர் எதுவித முன்னறிவித்தலுமின்றி வேலைநிறுத்தஞ் செய்தது கண்டிக்கப்பட வேண்டியது. பொதுஜன ஆதரவையோ, அனுதாபத்தையோ பஸ் ஊழியர் பெறுவதை இது தவிர்க்கும். இந்தத் திடீர் வேலைநிறுத்தங்கள் எவருக்கும் நன்மை தராது. மாறாக பஸ்சேவையின்மையால் அல்லப்பட்ட நோயாளிகள், மாணவர், தொழிலாளிகளின் சீற்றத்திற்கும் சாபத்திற்குத்தான் வேலைநிறுத்தக்காரர் இலக்காவார்கள்" என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'இடுப்பிலிருந்த கத்தியால் எதிரி வயிற்றில் குத்தினர்'

## மூளாய் கொலை முயற்சி வழக்கில் சாட்சியம்

அளவெட்டி, சனி

"காயம் அடைந்தவரை எதிரி காலால் உதைத்து, அவர் கீழே விழுந்ததும் எதிரி தனது இடுப்பில் இருந்த கத்தியால் குத்தினர்"

இவ்வாறு மூளாய் கத்திக் குத்து வழக்கு விசாரணையின்போது சாட்சியமளித்த இளைப்பாறிய பொலிஸ் அதிகாரி திரு. செல்லையா கந்தையா கூறினர்.

இவ்வழக்கில் மூளாயைச் சேர்ந்த எஸ். சிவராமலிங்கம் என்பவரை கத்தியால் குத்தி கொலைசெய்ய முயன்றதாக வட்டுக்கோட்டையை சேர்ந்த தவராஜா என்பவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

மல்லாகம் நீதிபதி எஸ். ஆனந்தகுமாரசுவாமி முன்னிலையில இவ் வழக்கு விசாரணைக்கெடுத்துக் கொள்ளப் பட்டபோது செல்லையா கந்தையா மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவதினம் மாலை எனது வீட்டுக்கு முன்புறம் உள்ள ஒழுங்கையில் ஏதோ சத்தம் கேட்டபோது நான் அங்கு சென்றேன். அங்கு எதிரி காயம் அடைந்தவரை காலால் உதைந்தபோது அவர் எழும்பமுயன்ளூர் அப்போது எதிரி தனது இடுப்பில் இருந்த கத்தியால் அவரின் வயிற்றில் குத்தினர். அப்போது நான் இதெல்லாம் சரியில்லாத வேலை" என்று சொன்னேன்.

மேல்விசாரணை இம்மாதம் 13-ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

எதிரிதரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினமும், பொலிஸ்தரப்பில் வழக்கறிஞர் சு. நடராசாவும் ஆஜராகியிருந்தனர்.

# 3-ம் எதிரி கொளுத்தச் சொன்னர் 1-ம் எதிரி வீட்டைக்கொளுத்தினர்

## தீவைப்பு வழக்கில் பெண் சாட்சியம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

"மூன்றாவது எதிரி அடியாதையுங்கோடா வீட்டைக் கொளுத்துங்கோடா" என்று சொல்ல, முதலாம் எதிரி தீப்பெட்டியால் வீட்டைக் கொளுத்தினர்." என நாகர் கோவிலைச்சேர்ந்த நாகதம்பி அன்னலட்சுமி என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா

மேல்விசாரணைபிற்போடப் பட்டுள்ளது.

## பெண் தற்கொலை

புலோலி, ஞாயிறு

தும்பளையைச் சேர்ந்த கார்த்திகேசு பெண் செல்லம்மா (வயது 76) தனது வீட்டினுள் கயிற்றில் தொங்

அண்ணு சொற் பயிற்சி மன்றம்

330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

4-8-69 காலை 9 மணிக்கு வகுப்பு ஆரம்பமாகின்றது.

மன்ற உறுப்பினருக்கு விபரங்கள் அனுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றார். (கா. நி)


## அண்ணா சொற் பயிற்சி மன்றம்

330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

ஃ 4-8-69 காலை 9 மணிக்கு வகுப்பு ஆரம்பமாகின்றது.

ஃ மன்ற உறுப்பினருக்கு விபரங்கள் அனுப்பப்பட்டுவிட்டன.

ஃ ஆண் பெண் அனைவரும் சேர முடியும். இன்னும் சிலருக்கே இடமுண்டு.

புதுமைலோலன்
பொறுப்பாளர்.



வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி கணேசன் சரோஜாதேவி நடித்த


## தாமரை நெஞ்சம்



கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (மட்டுநகர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)

2-30, 6-30, 9-30


எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா

மனோகர், அசோகன், விஜயகுமாரி, சோ, மனோரமா, கண்ணன் நடித்த

## கணவன்

இசை: எம். எஸ் விஸ்வநாதன்

டைரக்ஷன் ப. நீலகண்டன்


பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை மந்திகை அரசினர் வைத்தியசாலை, வல்வெட்டித்துறை இந்திராணி வைத்தியசாலை, கரவெட்டி மருத்துவமனை, செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் ஆகிய இடங்களில் பருத்தித்துறை மெதடிஸ்த் மிஷன், வடமராட்சி இந்து மகளிர், புலோலி ஆண்கள் இந்து, புட்டளை மகாவித்தியாலய, புலோலிமெதடிஸ்த் மிஷன் பாடசாலைகளைச்சேர்ந்த ஆசிரியரும், மாணவ மாணவியரும் சிரமதான வேலைகளில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர். இச்சிரமதானம் வடமராட்சியில் நடைபெற்றுவரும் சுகாதாரவாரத் தொடர்பாக நடைபெற்றது.

### ஓய்வு பெறுகிறார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் ஜனாப் எஸ். ஐ. அசீஸ் இம்மாதம் 10-ந் திகதி சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். (கா. நி.)


வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
எம்.ஜி.ஆர். - சாவித்திரி நடித்த
வேட்டைக்காரன்
புதிய கொப்பி

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி நடித்த
குழந்தைக்காக

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை10-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த
காவல்காரன்

REGAL JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Gordon Mitchell
&
Carl Mohner
in
GREEN EMERALDS

Apallo-8
MANOHARA
JAFFNA
Daily 4 Shows
Jane Fonda
in
BARBARELLA
Panavision/Technicolor)


வார்கள். நடுவழியில் திண்டாடவேண்டிய நிலைமை ஏற்படலாம். பிள்ளையின் பிடிவாதப் போக்கு மனதில் குழப்பத்தைத் தரும். குறைகேட்பதற்கும் இடமுண்டு.

**விருச்சிகம்-** தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும். புண்ணிய ஸ்தல யாத்திரை குறித்து ஆலோசிக்கப்படலாம். தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். இரக்கசிந்தைக்கும் இடமுண்டு.

**தனுசு-** ஒரே பாய்ச்சலில் முன்னணிக்கு வருவீர்கள். உங்கள் திறமையை மற்றவர்கள் வரவேற்பார்கள். கடமையில் புதிய உற்சாகம் பிறக்கும். வியாபாரம் சம்பந்தமாக வெளியூருக்கு செல்லநேரிடலாம்.

**மகரம்-** அதிர்ஷ்ட தேவதை அருகிலேயே இருக்கிறாள். சிலருக்கு அவள் அணைப்பும் கிடைக்கும். நண்பர்களின் பாராட்டுதல்களும் கிடைக்கும். பிள்ளையொன்றின் உயர்கல்வியில் அதிக கவனம் செலுத்தப்படலாம்.

**கும்பம்-** அதிக பிரயாசை இருப்பினும் ஆதாயம் மிகவும் அற்பமாகவே இருக்கும். முன்னாள் நிகழ்ச்சியொன்று தலையிடியைக் கொடுக்கும். பிணைநிற்றல், ஈடுவைத்தல் போன்ற விடயங்களில் ஈடுபடாதிருக்கவும்.

**மீனம்-** உடல்நலம் சிறிது பாதிக்கப்படும். பிள்ளைகளினால் மனஅமைதி குலையும். தாற்றல்களை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர். அதிகம் அலட்டிக் கொள்ளாது ஓய்வு எடுத்து கொள்ளவும்.

சாங்க அதிபரும், யாழ் பிரதேச கலாமன்றத் தலைவருமான திரு. எப். எபி. பீற்றேர்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில இலங்கைப்பல்கலைகழக தமிழ்த்துறைவிரிவுரையாளர் கலாநிதி. எஸ் வித்தியானந்தன், சாவகச்சேரி எம்.பி திரு. வ. ந. நவரத்தினம், பருத்துறை மாவட்டநீதிபதி திரு. சி. எம் தருமலிங்கம், மலலாகம் சி. ச தலைவர் திரு. வி. பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொள்வர்.

### நாடகங்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர்கோவில் ஆதரவில் இம்மாதம் 4-ந் திகதி 'மயானத்து மன்னன்', 'கருகிய மலர்' ஆகிய இரு நாடகங்கள் மேடையேற்றப்படவிருக்கின்றன.



இன்று மகத்தான ஆரம்பம்

## ராணி சினிமா

(யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜி கணேசன் ★ ஜெயலலிதா
★ நாகேஷ் ★ மனோரமா ★ நம்பியார்
★ சௌகார் ஜானகி
நடித்த


## எங்க ஊர் ராஜா


வல்வெட்டித்துறை, ஞாயிறு

"மூன்றாவது எதிரி அடியாதையுங்கோடா வீட்டைக் கொளுத்துங்கோடா" என்று சொல்ல, முதலாம் எதிரி தீப்பெட்டியால் வீட்டைக் கொளுத்தினார்." என நாகர் கோவிலைச்சேர்ந்த நாகதம்பி அன்னலட்சுமி என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

இவ்வழக்கு நாகர் கோவிலைச் சேர்ந்த குஞ்சித்தம்பி, விஜயரத்தினம், வைரமுத்து, நல்லையா ஆகியோர் அதே இடத்தைச் சேர்ந்த நாகதம்பியைக் கடந்த பங்குனிமாதம் 4-ம் திகதி அடித்துப்படுகாயப் படுத்தியதாகவும் அவரது வீட்டிற்கு நெருப்பு வைத்து நஷ்டம் விளைவித்ததாகவும் பொலிசாரால் குற்றம்சாட்டி தொடரப்பட்டது.

அன்னலட்சுமி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: சம்பவதினம் மாலை 6 மணிக்கு நானும், கணவரும், மகளும் வீட்டில் இருந்தோம். அப்பொழுது முதலாம், இரண்டாம் எதிரிகள் வீட்டிற்குள் வந்து 'என்னடா காசுதரவேண்டும்' என்று சொல்லி 1-ம் எதிரி கணவருக்கு கையாலும் தடியாலும் அடித்தார். உடனே கணவர் விழுந்துவிட்டார். 2-ம் எதிரி அந்தநேரத்தில் காலால் அடித்தார். பிறகு வந்த 3-ம் எதிரி' கூடியாதையுங்கோடா வீட்டைக் கொளுத்துங்கோடா' என்று சொல்ல 1-ம் எதிரி தீப்பெட்டியால் வீட்டைக் கொளுத்தினார். அப்போது 3-ம் எதிரி நெருப்பு பற்றிவிட்டது; நாங்கள்போவோம் என்று சொல்லிக்கொண்டு போய்விட்டார்கள். நாங்கள் குளறினோம். இதனால் எங்களுக்கு ரூபா1500 வரை நஷ்டமேற்பட்டது. பொலிசாருக்கும் முறைப்பாடு கொடுத்தோம்.

மேலவிசாரணைபிற்போடப்பட்டுள்ளது.

### பெண் தற்கொலை

புலோலி, ஞாயிறு

தும்பளையைச் சேர்ந்த கார்த்திகேசு பெண் செல்லம்மா (வயது 76) தனது வீட்டினுள் கயிற்றில் தொங்கிய நிலையில் இறந்து இருக்கக் காணப்பட்டார்.

இவரின் மரணத்தையிட்டு பருத்தித்துறை பொலிசாரின் அனுசரணையுடன் நடந்த மரண விசாரணையில் இறந்தவரின் பேத்தி சிவஞானசுந்தரம் மகள் சந்திரா சாட்சியமளிக்கையில் இறந்தவர் வீட்டினுள்இருக்கும் வளையில் கயிற்றில் தொங்கிக்கொண்டு இருக்கக் காணப்பட்டதாகவும் பின்பு தனது தாய் ஈஸ்வரி அம்மாவைக் கூப்பிட்டு அவரின் உதவியுடன் தொங்கி இருந்தவரை கீழே விட்ட பொழுது இறந்து இருக்க காணப்பட்டதாகவும் இறந்தவர் பல காலமாக ஒரு வித வியாதியினால் அவஸ்தைப்பட்டு இருந்தவரென்றும் சுகயீனம் காரணமாகத்தான் தற்கொலை செய்திருக்கக் கூடுமென்றும் சாட்சியமளித்தார்.

இறந்தவரின் மூத்தமகள் ஈஸ்வரி அம்மாவும் சாட்சியமளித்தார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் மூச்சுத் திணறியதால் இறந்தாரென்றும் தற்கொலையெனவும் தீர்ப்பளித்தார்.

### 50 லட்சம் டன் மாவு அன்பளிப்பு

கோட்டை, ஞாயிறு

ஆஸ்திரேலியா இலங்கைக்கு 50 லட்சம் டன் கோதுமை மாவை நன்கொடையாக வழங்கியிருக்கின்றது


யாழ்ப்பாணப் பகுதிக்கு விற்பனை பாகவுள்ள சஞ்சிகைகளும் பத்திரிகைகளும்கீழே தருகின்றோம் விற்பனையாளர் தொடர்பு கொள்க; கழிவு தரப்படும்.

| | |
|---|---|
| செய்தி - வாரஇதழ் | முத்தாரம்- மாதமிருமுறை |
| வெற்றிமணி - மாத இதழ் | சினிமாக்கதிர் - மாதஇதழ் |
| சங்கம் - மாதஇதழ் | ஸ்கிறீன் - வாரஇதழ் |
| காதல் - மாதஇதழ் | ஈவ்ஸ் வீக்லி - வாரஇதழ் |
| இந்துநேசன் - வாரஇதழ் | ஸ்ரார் அன் ஸ்ரைல் - மாதமிருமுறை |
| தினமணிக்கதிர் - '' | தமிரர் - மாதஇதழ் |
| தினமணி - தினஇதழ் | மத்தாப்பு - மாதஇதழ் |
| எக்ஸ்பிறஸ் - தினஇதழ் | |

இங்கே எல்லாப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் பெறலாம்.
பாடசாலை நூல்களும் பெறலாம்.
நியாய விலை! அன்பு எங்களது மூலதனம்!

அன்பு புத்தகசாலை
27 D, பெரியகடை, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உலக அமைதி அல்லது அழிவு ஆசியாவில் ஏற்படும் சம்பவங்களைப் பொறுத்திருக்கிறது"

## லாகூரில் அதிபர் நிக்ஸன்

லாகூர் ஆகஸ்ட். 2

உலகில் அமைதி நிலவுவதும் அழிவுகள் ஏற்படுவதும் ஆசியாவில் இடம் பெறும் நிகழ்ச்சிகளில்தான் தங்கியிருக்கின்றது என்ற கருத்தை அமெரிக்கா அதிபர் நிக்ஸன் பாகிஸ்தானில் வெளியிட்டிருக்கிறார்.

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யாக்கான் அளித்த விருந்தொன்றின் போது பேசிய அமெரிக்க அதிபர் நிக்ஸன், ஆசியாவில் இடம் பெறும் சம்பவங்கள் உலக அமைதிக்கும் வளர்ச்சிக்கும் வழி வகுப்பவையாகவும் இருக்கலாம் அல்லது உலகில் பெருமளவில் அழிவுகள் ஏற்படுவதற்கும் காரமாய் அமையலாம் என்று குறிப்பிட்டார்.

இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் உலக விவகாரங்கள் குறித்து ஆலோசனைகள் நடத்திய பின் நேற்று பிற்பகல் பாகிஸ்தானுக்கு வருகை தந்த அமெரிக்க அதிபரை ஜெனரல் யாஹ்யாகான் வரவேற்றார் திரு. நிக்ஸனைக் கௌரவிப்பதற்காக ஜெனரல் யாஹ்யாகான் அளித்த விருந்தின் போது, திரு. நிக்ஸன் பேசினார்

பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்கு மிடையில் நட்புறவுகள் மேலும் பலப்படுவதற்கு உழைக்கப் போவதாக அவர் குறிப்பிட்டார் இருநாடுகளுக்குமிடையிலான நட்புறவுக்காக தொடர்ந்து உழைப்பதின் மூலம் ஆசியாவின் மேன்மைக்கும் அமைதிக்கும் உதவ முடியும் என்று அவர் கருத்து வெளியிட்டார்.

வியட்னும் போரை நிறுத்துவதற்கு தன்பங்கைச் செய்வதன் மூலம் உலகின் அமைதிக்கு உதவ விரும்புவதாகவும் திரு நிக்ஸன் குறிப்பிட்டார்

உலகில் மக்கள் தொகை பெருகி வருவது பற்றி நிக்ஸன் கவலை தெரிவித்தார். மக்கள் தொகை அதிகரிப்பதற்கேற்ப விவசாய பொருளாதார வளர்ச்சியும் இருக்க வேண்டியதின் அவசியத்தை அவர் வற்புறுத்தினார்.

முன்னதாக ஜெனரல் யாஹ்யாகான் அதிபர் நிக்ஸனை வரவேற்றுப் பேசுகையில் இருநாடுகளுக்குமிடையில் பலகாலமாக இருந்து வரும் உறவுகளை நினைவு படுத்தினார். தமது பேச்சில் காஷ்மீர் விவகாரங்கள் பற்றியும். அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கும்-பாகிஸ்தானுக்குமிடையிலான அடிப்படைக்கருத்து வேற்றுமைகளைக்களைவதற்கு அதிபர் நிக்ஸன் தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்று ஜெனரல் யாஹ்யாகான் கேட்டுக் கொண்டார்.

திரு. நிக்ஸன் ஜெனரல் யாஹ்யாகானும் சுமார் இரண்டு மணிநேரம் ஆலோசனைகள் நடத்தினர். இந்தப் பேச்சுக்களின் போது பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதம் வழங்குவதை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று யாஹ்யாகான் வற்புறுத்தியதாகத் தெரிகின்றதுஇதுபற்றிஇந்த வருட முடிவுக்குள் அமெரிக்கா ஒரு தீர்மானத்துக்கு வரும் என்று அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப் பட்டதாகத் தெரிகின்றது.

அதிபர் நிக்ஸன் தமது ஆசிய பயணத்தை முடித்துக் கொண்டு இன்று ருமேனியாவுக்கு புறப்படுகின்றார்

---

மே. வங்கசட்டசபைக்குள்

## பொலிஸார் புகுந்தபோது மந்திரிகள் ஓடி ஒளித்தனர்

புதுடில்லி, ஆகஸ்ட் 2

நேற்று முன்தினம் மேற்கு வங்காள சட்டசபைக்குள் பொலிசார் அட்டகாசம் புரிந்தார்கள் அல்லவா? அதுபற்றி மேலும் தகவல்கள் கிடைத்துள்ளன.

ஒருகிராமத்தில்விவசாயத் தகராறு காரணமாக அங்கு அமைதியை ஏற்படுத்தச் சென்ற பொலிஸ் கோஷ்டி மீது தாக்குதல் நடத்தப் பட்டது. இந்தத்தாக்குதலில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் சுட்டுக் கொல்லப்பட்டார். காயமடைந்த மற்றும் இருவர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து தெற்கு கல்கத்தாவில் அலிப்டும் அவர்கள் உள்ளே புகுந்தனர். உடனே சபை ஒத்திவைக்கப்பட்டது.

### மந்திரிகள் ஓடினர்கள்

மந்திரிகள் ஓடிப்போய் அறைகளில் ஒளித்துக் கொண்டனர். அங்கத்தவர்கள், பத்திரிகையாளர்கள், பார்வையாளர்கள் அனைவரும் மண்டபத்திலுள்ள பல்வேறு அறைகளிலும் புகுந்து கொண்டனர். எதிரில் காணப்பட்ட அனைவரையும் பொலிஸ்காரர் தாக்கினர்கள். உதவி முதல்வர் ஜோதிபாசுவின் அறையை நோக்கி அவர்கள் போனர்கள்.

திரு. ஜோதிபாசுவிடம் ...ித்தார். அச்சமயம் ஆர்ப்பாட்டக்காரர்களில் பெரும்பாலோர் முதன்மந்திரியின் அறைக்கு முன்னிருக்கும் மைதானத்தில் கூடியிருந்தார்கள்.

திரு. ஜோதிபாசுவைக் கண்டித்து அவர்கள் கோஷமிட்டனர். அவர்கள் மத்தியில் திரு. பாசு பேசினர்.

### காலித்தனம்

நீங்கள் புரிந்துள்ளது பொலிஸ் படைக்கு சிறிதும் பெருமை தருவதாக இல்லை: மாணவர்களும் வாலிபர்களும் பொலிசாரால் சுடப் பட்டபோது கூட அவர்கள் நீங்கள் நடந்துகொண்டது போல் நடந்துகொள்ளவில்லை என்று அவர் கண்...

---

## சிரியாவுக்கு இஸ்ரேல் பிரதமர் மெயரின் கடும் எச்சரிக்கை

டெல்அவிவ் ஆகஸ்ட் 2

சிரியாவுக்கு இஸ்ரேல் பிரதம மந்திரி திரு. கோல்டாமெயர் எச்சரிக்கையொன்றை விடுத்தார்.

சிரியாவில் இஸ்ரேலியர் ஆக்கிரமித்துக்கொண்டுள்ள பகுதியில் ஒரு கூட்டத்தில் அவர் பேசினர்.

சிரியா தொடர்ந்தும் தாக்குதல்களை வலுப்படுத்தி வந்தால் அதனுல் ஏற்படும் விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பேற்கவேண்டும் என்று திருமதி மெயர் குறிப்பிட்டார்.

சிரியா எல்லைப்பகுதியில் மேலும் இரு ராணுவத் தளங்கள் அமைக்கப்பட விருப்பதுபற்றியும் அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேலுடனை அரபுப் போராட்டத்தில் சிரியா முன்னரைவிட அதிகம் ஈடுபடவிருப்பதாகவும் முன்னரைவிட சிரியா இப்பொழுது பலம் பெற்றிருப்பதாகவும் பேருட்டில் அதிகாரி ஒருவர் கூறினர்.

சூயஸ்கால்வாயின் குறுக்கே நேற்று மீண்டும் அரபுப் படைகளுக்கும் இஸ்ரேலிய படைகளுக்குமிடையில் கடுமையான சண்டை நடைபெற்றது. இருதரப்பிலும் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கக்கூடுமென்று கருதப்படுகின்றது.

---

யாழ். தொழில் பயிற்சி நிலையம்

## பல்துறைபொறியியலாளரும் நாளை கூடி ஆராய்வர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள பல பொறியியலாளர்களையும் கொண்ட ஆலோசனை மாநாடு ஒன்று நாளை மாநகர ஆலோசனை மண்டபத்தில நடைபெறவிருக்கின்றது.

மாநகரசபையால நிறுவப்படவிருக்கும் இந்நிலையத்திற்கான திட்டங்களைத்தயாரிக்கவென சபை அங்கத்தவர் திரு. எஸ். ஜே. அன்ரனி தலைமையில் நியமிக்கப்பட்ட குழு இக்கூட்டத்தைக் கூட்டுகின்றது.

யாழ். மாநகரசபையைச் சேர்ந்த பொறியியல் நிபுணர்களான திருவாளர்கள் இ. வைத்திலிங்கம், சில்வா, இளைப்பாறிய மாநகர ஆணையாளர் திரு. ஏ. வி. சின்னையா ஆகியோர் உட்பட பல துறைப்பட்ட ஆலோசகர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவிருக்கின்றார்கள்.

தமிழரின் தலைநகராகிய யாழ். நகரில், மாநகர சபை ஆதரவில் உருவாகும் இத்தொழிற்பயிற்சி நிலையத்துக்குத் தமிழ்த் தலைவர்களும், மற்றும் பெரியார்களும் ஆதரவு கொடுக்கவேண்டுமென்றும், நம் நாட்டு பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவிபுரிந்துவரும் வெளிநாட்டு ஸ்தாபனங்களும் இந்த முயற்சிக்கு உதவி அளிக்கவேண்டுமென்றும் இதுசம்பந்தமாக திரு. எஸ். ஜே. அன்ரனி பத்திரிகைகளுக்கு விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். (கா. நி.

---

## 'இராமநாதன் கல்லூரி பல்கலைக்கழகமாகும்'

— உதவி அரசாங்க அதிபர்

---

## தபாற் கந்தோர்களில் பண மோசடி

கோட்டை, ஞாயிறு

மடுல்கலை தபாற்கந்தோரில் சுமார் 25,000 ரூபா கையாடப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. இதுசம்பந்தமாக விசாரணைசெய்த தபால் இலாகா, மேற்படி தபாற்கந்தோர் அதிபரைத் தற்காலிக வேலைநீக்கஞ் செய்துள்ளது. நானு ஓயா தபாற்கந்தோரிலும் 4,000 ரூபா குறைந்திருக்கக் காணப்பட்டதாம். மேற்படி தபாற்கந்தோர் அதிபருக்கும் வேலைநீக்க அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

......

## சின்னமடு திருநாள்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சின்னமடு செபமாலை மாதாதேவாலய வருடாந்த உற்சவ எட்டாம் நாளான இன்று மாலை ஆறு மணிக்கு செபமாலை ஓதலும் திவ்விய பலிபூசையும் அதைத் தொடர்ந்து ஆசீர்வாதமும் இடம்பெறும். இவ்வாராதனைகள் நாரந்தனை சம்யே துருவானவர் தேவாலய கட்டளைக் குரவரினுல் நிறைவேற்றப்படும்.

நாளை மாலை செபமாலை வேஸ்பர் பலிபூசை என்பன இடம் பெறும். நாளை முழுவதும் செபமாலை மாதா தேவாலயத்தில் பாவசங்கீர்த்தனம் செய்து கொள்வதற்கு வசதிகள் செய்யப் பட்டுள்ளன.

## பெரியாருக்கு அறுவைச்சிகிச்சை

சென்னை, ஆகஸ்ட்-2

ஈ. வெ. ரா. பெரியார் உடல் நலக் குறைவால் வேலூர் ஆஸ்பத்திரியில் இருந்துவருகிறார். அவருக்கு கடந்த வியாழனன்று அறுவைசிகிச்சை செய்யப்பட்...

---

வேலையில்லாதவர்களுக்கு

## அரசாங்கத்துறையில் பயிற்சியளிக்கத்திட்டம்

கோட்டை, ஞாயிறு

வேலையில்லாதிருப்பவர்களுக்குத் தனியார்துறையில் பயிற்சியளிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தை அரசாங்க நிறுவனங்களுக்கும் விஸ்தரிப்பதற்கு ஆலோசிக்கப்படுவதாகத் தெரிகின்றது.

அரசாங்கத்துறையில் வேலையற்றவர்களுக்கு பயிற்சியளிக்கும்போது ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒரு நபருக்கு 50 சதவீதம் அரசாங்கம் நிதி வசதியளிக்குமென்றும், பயிற்சிபெறுபவர்கள் நாளொன்றுக்கு 2 ரூபாய் வீதம் வேதனம் பெறுவார்களென்றும்தெரிகின்றது.

தனியார்துறையில் வேலையற்றவர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டத்துக்கு அரசாங்கம் ஏற்கனவே அங்கீகாரமளித்திருக்கிறது. இந்த நபர்களுக்கு வேதனமளிப்பதற்கான நிதிவசதிகளையும் அரசாங்கம் கொடுத்துதவ இணங்கியிருக்கிறது. அரசாங்கத்துறையில் மின்சார இலாகா, நீர்ப்பாசன இலாகா போன்றவற்றில் வேலையற்றவர்களுக்குப் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யப்படுமென்று தெரிகின்றது.

## "சியவச" தானங்களைப் பகிஷ்கரிக்க தென்மாகாண குருமார்கள் தீர்மானம்

காலி, ஞாயிறு

சியவச கொண்டாட்டத்தை முன்னிட்டு மாத்தறையில் பௌத்த குருமாருக்கு வழங்கப்படவிருக்கும் தானத்தை தென்மாகாண பௌத்த குருக்கள் பகிஷ்கரிப்பதென தீர்மானித்துளனர். காலி நகரசபைமண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக் கூட்டத்தில் உரையாற்றிய பல பௌத்த குருமார்கள் கல்வியமைச்சர் திரு இரியகொலை அனுராதபுரத்தில் பௌத்த பல்கலைக்கழக திறப்புவிழாவின் போது சங்கத்தை இழித்துரைத்ததை குறிப்பிட்டு அச் செய மகா சங்கத்துக்கு அமைச்சர் இழைத்த பெருங்குற்றம் எனவும் சுட்டிக் காட்டினர்.

சாதாரணமாக 'மன்னிப்பு' எனக் கூறிவிடுவது மட்டும் போதாது எனவும் கல்வியமைச்சர் கண்டிக்கு மற்றும் அமைச்சர்களோடு சென்று பௌத்த சங்க பீடாதிபதியிடம் மன்னிப்புக் கோரவேண்டுமெனவும் கூட்டத்தில் பேசிய ஒவ்வொரு பௌத்த குருமாரும் குறிப்பிட்டனர்.

சியவசவை எதிர்த்து ஒவ்வொரு பிரிவேனுவிலும் கறுப்புக்கொடி காட்டுவதெனவும் சியவச கொண்டாட்டத்தை முன்னிட்டு வழங்கப்படும் தானங்களில் குருமார்கள் பங்கு பற்றக் கூடாது எனவும் ஏகமனதாக இக் கூட்டத்தில் பௌத்த குருமார்கள் தீர்மானித்துள்ளனர்.

## பாராட்டு

பருத்துத்துறை, ஞாயிறு

அப்பலோ11ன் சாதனைவிஞ்ஞான வளர்ச்சியில் ஒருபிரதான திருப்பமாகும். மனிதகுல நலவாழ்வுக்கும், சமாதானத்துக்கும் இச்சாதனை வழிவகுப்பதாகுகஇதன்முன்னேடிகளான அப்பல்லோ11 விண்வெளி வீரருக்கு எனது ஆசீர்வாதங்களும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

இவ்வாறுயாழ்ப்பாணம் மேற்றிராணியார் அதிவண. எமிலியானுஸ்பிள்ளை அப்பலோ -11 விண்வெளி வீரருக்கு அனுப்பியுள்ள...

## விஸ்தரிக்க கோரிக்கை

சுழிபுரம், ஞாயிறு

சித்தன்கேணிச் சந்தி போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சலாக விருப்பதால் சந்தியை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கும்படி பொதுமராமத்துப் பகுதியினரைக்கோரும் ஒரு தீர்மானம் சுழிபுரம் கிராம சபையின் மாதாந்தக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

வீதிக்கு அருகாமையிலிருக்கும் கட்டிடங்களை சில அடி தூரம் பின்நோக்கிக் கட்டுவதன் மூலம் சந்தியை விஸ்தரிக்கலாம் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

......

## 'நல்ல சமுதாயம் உருவாக வழி'

அளவெட்டி, ஞாயிறு

எமது நாட்டிலுள்ள இன மத வேறுபாடுகளை நீக்க வேண்டுமானல மக்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும். இளைஞர்கள் கையில...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுக் கொல்லப்பட்டார். காயமடைந்த மற்றும் இருவர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து தெற்கு கல்கத்தாவில் அலிப்பூரிலுள்ள 24 பர்காணு ஜில்லா சுப்பிரிண்டன்காரியாலயத்தைபொலிசார் சிலர் தாக்கினுர்கள். அங்கிருந்த பெரிய பொலிஸ் அதிகாரிகளை அவர்கள் 'கேரே' (முற்றுகை) செய்தனர். மாண்டுபோன கான்ஸ்டபிளின் சடலத்தை சவக்கிடங்கிலிருந்து சீக்கிரத்தில் ஒப்படைக்கும்படி அவர்கள் கோரினர். அங்கிருந்த அதிகாரிகள் சிலர் தாக்குதலுக்குள்ளாகினர். பொலிஸ் சுப்பிரிண்டனின் நேரடிப் பார்வையிலுள்ள பொலிஸ் கோஷ்டி வந்து ஆர்ப்பாட்டக்காரரை அப்புறப் படுத்தியது.

இந்த நிகழ்ச்சியின் பின்னர் அடுத்தநாள் இறந்து போன கான்ஸ்டபிளின் சவ ஊர்வலம் நடந்தது. இந்த ஊர்வலத்தில் சுமார் 3,000 கான்ஸ்டபிள்கள் கலந்து கொண்டனர். இவர்களில் அநேகர் 'யூனிபோம்' அணிந்திருந்தனர். ஊர்வலத்தினர் சட்டசபை மண்டபத்தின் தெற்கு வாயிலில் நிறுத்தப்பட்டனர். ஆனுல் அவர்கள் கட்டுக்காவலை மீறி உள்ளே புகுந்துவிட்டனர். கோஷங்களைக் கோஷித்துக்கொண்டும் பொலிஸ் மந்திரி மீது வசைமாரிபொழிந்துகொண் வரையும் பொலிஸ்காரர் தாக்கினுர்கள். உதவி முதல்வர் ஜோதிபாசுவின் அறையை நோக்கி அவர்கள் போனுர்கள்.

திரு. ஜோதிபாசுவிடம் போய் தங்களின் சகா ஒருவர் அரசியல் வாதிகளால் கொல்லப்பட்டதாகவும் தங்களுக்கு நீதிவேண்டும் என்றும் அவர்கள் கூச்சல் போட்டார்கள்.

திரு. ஜோதிபாசு, அவர்களிடம் காரசாரமாகப் பேசினுர். இதற்கிடையில் பல மந்திரிகளும் விரைந்து அவரைச்சுற்றிநின்றுகொண்டார்கள். பொலிஸ்காரர்களில் ஒருவர் பணியில் ஈடுபட்டிருக்கையில் கொல்லப்பட்டது குறித்து தாம் கவலைப்படுவதாவும் ஆனுல் இப்படி சபைக்குள் புகுந்து ரகளை செய்வது பெரிதும் கண்டிக்கப்படவேண்டியது என்றும் திரு. பாசு, பொலிஸ்காரர்களிடம் கூறினுர். அதேசமயம் இன்னெரு கோஷ்டியினர், சபாநாயகரின் அறைக்குள் புகுந்து டெலிபோன் கம்பிகளை அறுத்தும் நாற்காலிகள் சிலவற்றை உடைத்தும் குழப்பம் செய்தனர். பல மந்திரிகளின் அறைக்குள் புகுந்து தஸ்தாவேஜுகளைக் கிழித்தும் டெலிபோன் கம்பிகளை அறுத்தும் அட்டகாசம் புரிந்தனர்

இதற்கிடையில் பொலிஸ் கமிஷனர் திரு. பி. கே. சென் அல்வெந்து ஆர்ப்பாட்டக்காரர்களைச் சந் பெருமை தருவதாக இல்லை. மாணவர்களும் வாலிபர்களும் பொலிசாரால் சுடப்பட்டபோது கூட அவர்கள் நீங்கள் நடந்துகொண்டது போல் நடந்துகொள்ளவில்லை என்று அவர் கண்டித்தார். அதன்பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலரை அழைத்துச் சென்று சபையில் உடைந்த நாற்காலிகள், அறுந்த கம்பிகள் மோன்ற சேதங்களை மந்திரிகள் காண்பித்தனர். திரு பாசு தமது அறைக்குத் திரும்பிய பின்னரும் கூட சிலர் சபைக்குள் திரிந்து கொண்டிருந்தனர். இந்தச் சமயத்தில் பொலிஸ் கமிஷனர் அவர்களை எச்சரித்தார் கலைந்து போவதற்கு ஐந்து நிமிடம் அவகாசம் கொடுத்தார். அதன்பின்னர் அவர்கள் எல்லாரும் வெளியில் கூடி இறந்த கான்ஸ்டபிளைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டனர்.

பொலிசார் சபைக்குள் நுழைந்தபொழுது சபாநாயகர் திரு விஜயகுமார், பானர்ஜி ஜன்னல் வழியாகக் குதித்துத் தப்பியதாக நிருபர்களிடம் கூறினுர்.

## மகாத்மா எழுதிய தமிழ்க்கடிதம்

சென்னை, ஆகஸ்ட் 2

டில்லியின் ராஜ் காட்டிலிருக்கும் காந்தி சமாதிக்கு அருகில் அக்டோபர் 2-ம் தேதி ''காந்தி தரிசனம்'' காட்சியொன்று தொடங்குகிறது.

அங்குள்ள தமிழ்நாட்டு அரங்கிற்கு முன்னுல் மிகப் பெரிய கைராட்டை நிறுத்தப்படும். ''மனிதர்காந்தி'', காந்தியும் அவரது காலத்துத் தமிழ் நாட்டினரும், ''தமிழ்நாட்டில் காந்திநிலையங்கள்'' ஆகின பற்றியவையும் இன்ன பிறவும் அங்கு காட்சிக்கு வைக்கப் படும்.

தலை சிறந்த வெளியீட்டாளரும் எழுத்தாளருமான ஜி. ஏ. நடேசனுக்கு காந்தியடிகள் தமிழில் எழுதிய நீண்ட கடிதம், தென்னுபிரிக்காவின் தலையாய அறப்போர் வீராங்கனையான தில்லையாடி வள்ளியம்மை, காந்தியடிகளின் பொது வாழ்க்கையில் தொடர்பு கொண்டிருந்தது பற்றிய செய்திகள் ஆகியனவும் அங்கு காட்சிக்கு வைக்கப் படும்.

——

சுழிபுரம், ஞாயிறு

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் 31வது ஆண்டு வருடாந்தப் பொதுக்கூட்டம் வருகிற செவ்வாய்க்கிழமை காலை சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

# "...பல்கலைக்கழகமாகும்"

### — உதவி அரசாங்க அதிபர்

உரும்பராய், ஞா.

''இந்த நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு உழைத்தமகான்களுள் அதிவிசேடமானவர் இராமநாத வள்ளலாவர். சைவசமயத்துக்கும் தமிழ் மொழிக்கும் தொண்டு செய்த பெரியார்களில் நாவலர் பெருமானுக்கு அடுத்த படியாக எண்ணக்கூடிய பெரியார் சேர். பொன்னம்பலம் இராமநாதன். இராமநாதன் கல்லூரியை அவர் நிறுவும்போது இக்கல்லூரி ஒரு பல்கலைக் கழகம் ஆக வேண்டுமென்று கனவுகண்டார். பெரியவர்கள் கண்ட கனவு வீண்போகாது.''

இராமநாதன் இசைக் கழகத்தின் அதிபராகவிருந்து தொண்டாற்றி அமெரிக்காவுக்குச் செல்லும் இசை மேதை திரு எம். ஏ. கல்யாணகிருஷ்ணபாகவதர் இராமநாதன் அக்கடமி சார்பில் நடைபெற்ற உபசார விழாவில் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இராமநாதன் அக்கடமித் தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தமது தலைமையுரையின்போது ''இராமநாதன் இசைக் கழகத்தின் எதிர்காலம் சிறப்பாய்அமைவதற்குரிய அறிகுறிகள் தென்பட்டுள்ளன. இசைக் கழகம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்துவருகிறது. எதிர்காலத்தில் அமைய இருக்கும் இராமநாதன் பல்கலைக் கழகத்தில் இசைத் துறையும் விளங்கக்கூடிய வகையில் கல்யாணகிருஷ்ண பாகவதர் சங்கீத அக்கடமிக்குத் தொண்டுசெய்துள்ளமை பாராட்டத்தக்கது'' என்றுர்.

இராமநாதன் அக்கடமிக் காரியதரிசி திரு. ச. அம்பிகைபாகன் நன்றி கூறிவிட்டு இராமநாதன் அக்கடமி ஞாபக அன்பளிப்பாக திரு. கல்யாணகிருஷ்ணபாகவதருக்கு வெள்ளித்தட்டை வழங்கிக்கௌரவித்தார்.

அக்கடமிப் போஷகர் திரு. அ. சரவணமுத்துவும் பேசினுர்.

கல்யாணகிருஷ்ணபாகவதர் நன்றிதெரிவித்துப் பேசுகையில், ''இந்தியாவிலேயே ஈடிணையற்ற மகாவித்துவானுன சித்தூர் சுப்பிரமணியபிள்ளை இசைக் கழகத்தின் எதிர்கால அதிபராகவர இருப்பது மிகவும் வரவேற்கக்கூடியது. என் போன்ற சங்கீத வித்துவான்கள் சித்தூராரிடம், தாளம், பல்லவி முதலிய பலவிஷயங்களில் கற்றுக்கொள்ளவேண்டியவை ஏராளமாகவுண்டு'' என்றுர்.

இராமநாதன் இசைக்கழகத்துமாணவர்களது வீணைக் கச்சேரி, வாய்ப்பாட்டு வயலின் இசை, மிருதங்கக்கச்சேரி முதலியனவும் இடம் பெற்றன.

## சமூக சேவைக்கு பரிசு

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை சாரணர் சங்கத்தின் சமூக சேவைக்கான ''சலேஞ் கேடயத்தை'' யாழ்ப்பாணம் புனித கிறிஸ்தோப்பர் கடற் சாரணர்கள் சென்ற மாதம் 26-ம் திகதி மாலை 4.30 மணியளவில் இராணி மாளிகையில் இலங்கையின்மகாதேசாதிபதியும், இலங்கைப் பிரதம சாரணருமான கவனர் ஜெனரல் வில்லியம் கோபல்லவாவிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

இப்பரிசளிப்பு வைபவத்தின் போது இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வந்த மாவட்ட சாரணஆணையாளர்களும், சாரணராளர்களும், சாரணர்களும் சமூகமளித்திருந்தனர். இவ்வைபவத்தின்போதுயாழ்ப்பாணம் கடற்சாரணர் இயக்கப் பிரதிநிதிகள் கேடயத்தை பெற்றுக் கொண்டனர்.

யாழ்ப்பாண மாவட்ட சாரணியக்கத்தின் 1968 ம் ஆண்டுக்கான சமூக சேவை கேடயத்தைப் பெற்றுக் கொண்டவர்களும் யாழ்ப்பாணக் கடற் சாரணர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

......

## நாடக விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

சென்ற சனிக்கிழமை இரவு ஓடை அறிவொளி ஐக்கிய சனசமூக நிலையத்தினரால் நாடக விழாவொன்று புத்தூர் கி. ச. உபதலைவர் திரு. ப. குகதாசா தலைமையில் நடைபெற்றது. சிறந்த கல்வியையும், கலையையும் சனசமூக நிலையங்களால உண்டாக்க முடியுமென அவர் தமது தலைமையுரையில குறிப்பிட்டார்.

சென்னை, ஆகஸ்ட்-2

ஈ. வெ. ரா. பெரியார் உடல் நலக் குறைவால் வேலூர் ஆஸ்பத்திரியில் இருந்துவருகிறுர். அவருக்கு கடந்த வியாழனன்று அறுவைசிகிச்சை செய்யப்பட்டது. மூத்திரக்குழாய்க் கோளாறு காரணமாக பெரியாருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

## உதவி மேயருக்கு பாராட்டு

சுழிபுரம், ஞாயிறு

யாழ்ப்பாண மாநகரசபையின் உதவி மேயர் திரு. ஆ. துரைராசசிங்கத்துக்கு அவரது பிறந்த இடத்தைச் சேர்ந்த மக்கள் ஒரு சேவை நலம்பாராட்டுக்கூட்டத்தை இம்மாத நடுப்பகுதியில் நடாத்தவிருக்கின்றனர். சுழிபுரம் கிராமசபை மண்டபத்தில் நடைபெறும் இக் கூட்டத்தில் பல பிரமுகர்கள் பாராட்டுரை வழங்கவிருக்கிறனர்.

விண்வெளி வீரருக்கு எனது ஆசீர்வாதங்களும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

இவ்வாறுயாழ்ப்பாணம் மேற்றிராணியார் அதிவண. எமிலியானுஸ்பிள்ளை அப்பலோ -11 விண்வெளி வீரருக்கு அனுப்பியுள்ள தமது பாராட்டுச் செய்தியில குறிப்பிட்டுள்ளார்.

★

அளவெட்டி, ஞாயிறு

மயிலிட்டி கிராம சபை பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. என். நடராசாவும், லிகிதராக கடமையாற்றிய திரு. மகாதேவனும் முறையே கராச்சி, வங்காலை கிராம சபைக்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளதையிட்டு மயிலிட்டு கிராம சபையினர் பிரிவுபசாரம் அளித்தனர்.

கிராம சபைத்தலைவர் திரு. வ. கிருஷ்ணசாமி தலைமையில் நிகழ்ந்த இவ் வைபவத்தில் இவர்களின் சேவையைப் பாராட்டி பலர் உரையாற்றினர்.

அளவெட்டி, ஞாயிறு

எமது நாட்டிலுள்ள இன மத வேறுபாடுகளை நீக்க வேண்டுமானுல மக்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும். இளைஞர்கள் கையிலதான் எதிர்காலம் தங்கியுள்ளது. இனமத வேறுபாடற்ற முறையில ஒன்றுபட்டு உழைத்தாலதான் வருங்காலத்தில நலல சமுதாயத்தை உருவாக்கலாம் என மலலாகம் சனசமூக நிலையப் பொதுக்கூட்டத்தில பேசுய வழக்கறிஞர் சிவஸ்ரீதரன் கூறினுர்.

நிலைய நிர்வாகிகள் தெர்வில பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்; சிவஸ்ரீதரன், உபதலைவர்: திரு. எஸ். சுந்தரலிங்கம், செயலாளர்: திரு. சிவதில்லைநாயகம், தனுதிகாரி; ஆர். ஜெயகலாசிங்கம். 12 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

# 'வகுப்புவாதசப்தத்தால்பகுத்தறிவு அமிழ்ந்திப்போய்விட்டது'

## கனிஷ்ட பல்கலைக்கழக உப அதிபர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''எமது தலைவர்கள் எங்களை எங்கேஅழைத்துச் செல்கின்றனர்? சமீபத்தில் நிகழ்ந்த சம்பவங்களைக் கொண்டு ஆராய்ந்து பார்க்கும் பொழுது உண்மையில் அவர்கள் எங்களுக்கு வழி காட்டுகின்ருர்களா, துரத்தியடிக்கிருர்களா என்று ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது.''

இவ்வாறு பலாலி, கனிஷ்ட பல்கலைக்கழக உப அதிபர் திரு சிவபாலன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் சங்கம் நடத்திய வருடாந்த இரவு விருந்திலே பேசும் பொழுது கூறினுர். இவ் விருந்து கல்லூரிக் குமாரசுவாமி மண்டபத்திலே நடைபெற்றது.

வகுப்புவாதத்தின் வழிப்பட்டு நடக்கும் அரசியலால் ஏற்படும் துன்பகரமான விளைவுகள் பற்றியும் அவர் குறிப்பிட்டார். ''இரு பிரிவுகளிலுமுள்ளவர்கள்நீண்ட காலமாக ஒருவரை ஒருவர் நோக்கி உரையாடுவதற்குப் பதில் சப்தம் போட்டுக் கொண்டே வந்திருக்கிருர்கள். இவர்கள்போட்ட சப்தத்தில் பகுத்தறிவு அமிழ்ந்திப் போய்விட்டதன் பலனுக ஓரினத்தை மற்ற இனம் புரிந்து கொள்ள முடியாத நிலை உருவாகி வந்திருக்கிறது. இன, சமூக, மொழிசம்பந்தப்பட்ட உணர்ச்சிகளுக்கு மேலாகப் பரந்த தேசிய உணர்ச்சியும், அமைதியும் ஏற்பட்டால் மாத்திரமே நாடுமுன்னேற்றப் பாதையில் செல்ல முடியும். தேசிய உணர்ச்சி நசுக்கப்பட்டநிலையிலே உள்நாட்டு நல்லுணர்வுகள் மேலோங்குதல் இயலாத காரியமாகும். காந்திய நூற்றுண்டு விழாவும், மாபெரும் ஞானியாம் திருவள்ளுவரின் இரண்டாயிரமாண்டுப் பூர்த்தி விழாவும் கொண்டாடப்படும்இக்கால கட்டத்தில், யாழ்ப்பாணத்தின் சமூக வாழ்க்கையிலே சமத்துவம் இன்னமும் ஏற்படாதிருத்தல மிகவும் துக்கத்தைத் தருகின்றது.''

திரு.சிவபாலனின் சொற்பொழிவுக்குப் பதிலளிக்குமுகமாகப்பேசிய உயர் தர வகுப்புமாணவர் சங்கத்தலைவர் திரு.வீ.எஸ். ஸ்ரீகாந்தா முன்னேற்றப் பாதையில் சிலர்தடையாக இருப்பதால் சமூகம் பெரும் கஷ்டத்துக்குள்ளாவதாகத் தெரிவித்தார்.

உயர்கல்வி பற்றிப் பேசுகையில் ''காலம் மிகவும் விரைவாக மாறிக்கொண்டிருக்கிறது. மதிப்பிற்குரிய உபவேந்தர்களே பல்கலைக் கழகச் சுற்றுடலிலிருந்து அடுத்தபடியாக தொழிலளிப்புத் திணைக்களத்தில் காத்துக்கொண்டிருக்கிருர்கள். இதற்குச் சமமான வருத்தத்தைத் தரும் நிலையாதெனில் இன்றுநோயாளிகள் நிற்பது மாத்திரமன்றி டாக்டர்கள் கூட 'கியூ' வரிசையில் நிற்கிருர்கள். இந்தச் சூழ்நிலையிலே இடம்பெயர் கனிஷ்ட பல்கலைக்கழகமாகிய, பனந்தோப்புள்அமைந்திருக்கும் பல்கலைக்கழகத்தில் கூட நுழைவிடம் தேடுவது சங்கடமாகிவிட்டதில வியப்பில்லை'' என்றுர்

திரு. எஸ். நடேசலிங்கம் சகலஉயர்தர மாணவர் சங்கங்களுக்கும் அழைப்புரை கூற இந்து மகளிர் கல்லூரியைச்சேர்ந்த செல்வி சாவித்திரி பொன்னம்பலம் அதற்குப் பதிலிறுத்துப் பேசினுர்.

விருந்தினருக்கான அழைப்புரை திரு. ரீ. கே. யோகநாதனுல் நிகழ்த்தப்பட, அதற்கு டாக்டர் கே. கனகரத்தினம் பதிலுரைமொழிந்தார்.

(கா. நி)

# செவ்வாய்க் கிரகத்தில் உயிர்கள் உண்டா?

## மெரினர் படங்களைப் பார்த்த விஞ்ஞானிகள் கருத்து

ஹூஸ்டன் ஆகஸ்ட் 2

மெரினர்-6 செவ்வாய்க் கிரகம்பற்றி பூமிக்கு அனுப்பியுள்ள படங்களில் இதற்குமுன் செவ்வாய்க் கிரகத்தைப்பற்றி தெரிந்திராத பல புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. இதில் முக்கியஅம்சம் என்ன வென்றுல்செவ்வாயின் தென்துருவப்பகுதியில் எரிமலை வாயில்கள் இருக்கலாம் என்பதாகும்.

இத்தகவல்களை கலிபோர்னியா விண்வெளி விஞ்ஞானியான டாக்டர் ரொபர்ட் லெயிட்டன் தெரிவித்துள்ளார்.

செவ்வாய்க் கிரகத்தில் தெரிந்த கால்வாய்கள் அங்குள்ள நாகரிக மக்களால் ஏற்படுத்தப்பட்ட விவசாயக் கிடங்குகள் என்று முன்னர் விஞ்ஞானிகள் கருதி வந்ததற்கு ஆதாரம் எதுவும் இந்தப் படங்களில் கிடைக்கவில்லையென்றுடாக்டர் லெயிட்டன் கூறினுர்.

செவ்வாயில் வாய்க்கால்கள் இருக்கும்சாத்தியமிலலை என்றும் அவர் கருதுகிறுர். படத்தில் முகில்கள் நகர்வதுபோல் காட்டப்பட்டிருப்பதாகவும் இது செவ்வாயில் மிருதுவான பிரதேசத்தை குறிக்கலாம் என்றும் அவர் கூறினுர். டாக்டர் லெயிட்டரின் சகாவான டாக்டர் முர்ரி செவ்வாயில் ஒரு சில முகில் படலம் இருப்பதானுலும் அங்கு ஏதாவதொரு சுவாத்தியம் இருக்கத்தான் வேண்டும் என்று கருதுகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஒவ்வொருவரும் முழுமையான வாழ்வு வாழ்வதற்கான சகல வாய்ப்புக்களும் அளிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் ஜனநாயக தர்மம் உண்மையான முறையில் உணரப்படமுடியும்.

— மகாத்மாகாந்தி.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆடி மாதம் 19-ந்திகதி (3 - 8 - 69)

## மந்திரி மகள்

வைத்தியக்கல்வி பயிலுவதற்காக, இந்திய அரசாங்கம் அளித்த விசேஷ உபகாரச் சம்பளம் பெற்று இந்தியாவுக்குச் சென்ற தமது புதல்வியை கல்வி அமைச்சர் இங்கு திருப்பி அழைத்துவர அவசரமாகப் பறந்துசெல்வதாக ஒரு செய்தி தெரிவிக்கின்றது.

அதிக தகுதிவாய்ந்த மாணவ மாணவிகள் இலங்கையில் பல்கலைக்கழகத்தில் சேரமுடியாது சங்கடப்படுகையில், கல்வி அமைச்சர் அறிந்தோ அறியாமலோ, அவரதுபுதல்வி இந்தியாவின் உதவி பெற்று அங்கு உயர்தரக்கல்வி பயிலச்சென்றதை இங்கு சில பத்திரிகைகள் கண்டித்தன. அதை முன்னிட்டே கல்வி அமைச்சர் பிரதமரின்சம்மதத்துடன், தமது புதல்வியை இந்தியாவிலிருந்து திருப்பி அழைத்துவரச் செல்லுவதாகத் தெரிகிறது.

அமைச்சரின் புதல்வியான செல்வி சகிதாவுக்கு இதனால் பெரிய ஏமாற்றமாக இருக்கும் என்பது உண்மையே. ஆனாலும் மந்திரியின் மகள் என்ற காரணத்தாலேயே அவருக்கு இந்தச் சலுகை கிடைக்க முடிந்துள்ளது. இலங்கையிலேமற்றவர்களுக்குக் கிடைக்கமுடியாத ஒரு சலுகை, பிற அரசாங்கத்தின் மூலம் அவருக்குக் கிடைக்க முடிவதாயின் அதற்குபலத்த எதிர்ப்புகள் கிளம்புவது இயற்கையே. மேலும் கல்வி அமைச்சர் அனுராதபுரத்தில் ஏதோ கூறிவிட்டதற்காக அவருக்கு பலமான எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் பிரதமருக்கும் எக்கச்சக்கமான நிலை. பொதுத்தேர்தல் வர இருக்கும் இச்சமயத்தில் இப்புதிய புகாரும் கிளம்பியுள்ளதால், இந்தத் தவறைத்திருத்திக்கொள்ள உடன் இந்தியாவுக்கு அமைச்சர் செல்லுவதாயின் அது சரியான காரியமே. தவறுகள் செய்வது மனித சுபாவம். அதை சுட்...

அப்பிள்ளைகளுக்குமட்டுமன்றி அவர்களது பெற்றோர்களுக்கும் எவ்வளவு ஏமாற்றமாக இருக்குமென்பதை கல்வி அமைச்சர் இப்போதுஉணர்ந்திருப்பார். இந்தியாவுடன் ஒப்பிட்டாலும், இலங்கையிலே பல்கலைக்கழக கல்வி பயில வசதிகள் அதிகக் குறைவு. பல்கலைக்கழக கல்வி கமிஷன் அறிக்கையின்படி, இந்தியாவிலே சராசரி 2880 பேருக்கு சர்வகலாசாலையிலே ஓர் இடம் வீதம் இருக்கையில் இலங்கையிலே 4000 ரோருக்கு ஓர் இடம் வீதமே உள்ளதாம். அமெரிக்காவில் 272 பேருக்கு ஓர் இடம் வீதமிருக்கிறது. இதிலிருந்து இலங்கையிலே தகுதியுள்ள பிள்ளைகளுக்கும் உயர்தரக் கல்வி எவ்விதம் மறுக்கப்படுகிறதென்பது புலனாகும். ஆகவேதான் எப்பாடுபட்டாவது வெளிநாடு சென்று உயர்கல்வி கற்க, நம்பிள்ளைகளில் பலரும் பெரும் ஆவல் கொண்டிருக்கிறார்கள்.

அரசாங்கத்துக்குஇது தெரியும். என்றாலும் பணமில்லை என்ற காரணத்தால்தான் புதிய வசதிகளை இங்கு ஏற்படுத்த மறுக்கின்றது. இந்தியாவிலே சர்வகலாசாலைப் படிப்புஇலவசமல்ல. அதனால் தனிப்பட்ட பல ஸ்தாபனங்கள் கல்லூரிகளை ஆரம்பித்து நடத்த முடிகிறது. இங்கு அரசாங்கத்திடம் பணம் இல்லாவிடில் இலவசக் கல்விமுறையில்தக்கதிருத்தங்கள் செய்து தகுதியுள்ள மாணவமாணவிகள் இலங்கையிலேயே மேற்படிப்பு படிக்க முடியுமாறு பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் மேலான கடமையாகும்.

யாழ்ப்பாணத்திலே ஒரு பல்கலைக்கழகம் ஆரம்பிக்க எவ்வளவோ நியாயமும், வாய்ப்பும்இருப்பதால், அதை ஏற்படுத்த கல்விஅமைச்சரும் அரசாங்கமும் இனியும் தவக்கம் செய்ய முடியாது. இந்தியாவிலிருந்து ஏமாற்றத்...

# "தனித்து நிற்கின்றது தமிழர் சமூகம்"

— எம். சிவசிதம்பரம் எம். பி.

**சிம்மாசனப் பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது செனட்சபையில் தமிழரசு கட்சியைச் சேர்ந்த செனட்டர் நடராசா அவர்கள் நிகழ்த்திய உரை இங்கு தொடராக வெளியிடப் பட்டது நினைவிருக்கலாம் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும்-பிரேரணை மீது மக்கள் பிரதிநிதிகள் சபையில் தமிழ் காங்கிரசைச் சேர்ந்த உடுப்பிட்டி எம். பி. யும் உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பாம் அரசாங்க தரப்பில் பதிலளித்துப் பேசியதின் விபரம் இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.**

இந்த விவாதம் இயற்கையாகவே, எதிர்பார்க்கப்பட வேண்டியது போலவே தேர்தலுக்கு முந்திய ஒரு போட்டியாக உருவெடுத்துள்ளது. இங்கு நிகழ்த்தப்பட்ட பேச்சுகள் எல்லாம், அங்கத்தவர்கள் யாவரும் வரப்போகும் தேர்தலில் பொதுமக்கள் முன் மேடைப்பேச்சுக்காக ஆயத்தமாகிறார்கள் என்பதைக் காட்டுகின்றன வென்றால் வட்டுக்கோட்டை அங்கத்தவருடைய (திரு. அமிர்தலிங்கம்) பேச்சு, தேர்தல் காலத்தில் நாம் எப்படிப்பட்ட பேச்சைக்கேட்கப் போகிறோம் என்பதற்கு சரியான உதாரணமாகும்.

அப்பேச்சு, வட்டுக்கோட்டை அங்கத்தவர் ஐந்தாறு மாதங்களுக்கு முன்னால் கொண்டிருந்த அபிப்பிராயத்துக்கு நேர்மாறானது மட்டுமல்லாமல் சமஷ்டிக்கட்சியின் ஒவ்வொரு அங்கத்தவருமே வெளிப்படுத்திய அபிப்பிராயங்களுக்கு நேர்மாறானதாகும்.

வடமாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நாம் இச்சபை முன்னால் வைப்பதற்கு ஒரு முக்கிய பிரச்னை உள்ளது. முன்னரும் நாம் இதைக்கூறியுள்ளோம். இப்பொழுதும் நாம் இதை இச்சபையில் கூற விரும்புகிறோம்.

### விரோதத்தைச் சம்பாதிக்கின்றனர்

ஆனால் வட்டுக்கோட்டை அங்கத்தவருடைய பேச்சு இப்பிரச்னைக்குப் பெரும் பாதகம் புரிந்துள்ளது என்பதை நான்சொல்லவிரும்புகிறேன். இப்பேச்சின் மூலமாக அவர் போதனாமொழி விஷயமாக முதன்முதலாகப் பிரதமர் ஒருமுடிவைஎடுப்பதற்குத் தூண்டிவிட்டுள்ளார். அவரே வெட்டவெளிச்சமான உண்மையைக்கூறி சமஷ்டிக்கட்சி இச்சபையில் தனிமைப்படுத்தப்பட்டு நிற்கிறதென்பதை ஒப்புக்கொள்ள வேண்டிவந்தது. பிடிவாதமாக அவர்களே நம்பிக்கை வைக்காத ஒரு சமஷ்டி அமைப்புக்கான கோரிக்கையை இச்சபையில் மீண்டும் மீண்டும் எழுப்புவதன் மூலமாக சபையின் இப்...

அறிவுறுத்தினோம். "உங்களது வாழ்நாள் ஒருபுறமிருக்க உங்களுடைய குழந்தைகளது வாழ்நாளில்கூட ஒரு சமஷ்டி ஆட்சியை நீங்கள் சாதிப்பீர்கள் என்ற உறுதியான நம்பிகையை உங்களுக்கே கிடையாது" என்பதை நாம் அவர்களிடம் கூறினோம். ஆனால் முழுதமிழ் சமூகத்தையும் வருத்துகின்ற சில அடிப்படையான பிரச்னைகள் உண்டு. தமிழ் மக்களின் அந்த அடிப்படையான கோரிக்கைகளின்மீது நாம் ஒன்றுசேர்ந்து ஓர் ஐக்கிய முன்னணியை அமைப்போம் என்று அவர்களிடம் கூறினோம். அவர்களுக்கும் பிரதான சிங்கள அரசியல கட்சிககும் இடையிலான இவ்விதமான இரு கட்சி ஒப்பந்தங்களால இதுபோன்ற பிரச்னைகளையும், இந்நாட்டின் சிறுபான்மையினர்களைப் பாதிககும் பிரச்னைகளையும் தீர்க்க முடியாது என்பதையும்நாம் சமஷ்டிககட்சிகம், தமிழ் மககளுககும் கூறினோம். நாட்டின் எல்லா அரசியல் கட்சிகளையும் கூட்டி இப்பிரச்னைகளை மனந்திறந்து கலந்தாலோசித்து ஒரு முடிவுககு வருவதுதான் இதைச் செய்வதற்கான ஒரே வழி என்பதையும் நாம் அவர்களுககுக கூறினோம்.

### எங்கள் யோசனையை நிராகரித்து விட்டனர்

எங்களது வேண்டுகளை அவர்கள் நிராகரித்தார்கள் எங்களது யோசனைக்கு அவர்கள் செவி மடுக்கவில்லை. பிரதமரோடு ஓர் ஒப்பந்தத்தைக் ... தாக அவர்கள் கூறினார்கள். இப்பொழுது அவர்கள் பழைய இடத்துக்கே மீண்...

கூடாதென்பதே எமது முதல் நோக்கம். இரண்டாவதாக தப்பித்தவறி இனவெறி பிடித்தவர்களை அதிகாரத்துக்குவர விடுவோமானால் இன்று இருப்பதிலும் பார்க்க படுமோசமான நிலைமைக்கு இந்த நாட்டிலுள்ள சிறுபான்மை இனத்தவர்கள் உள்ளாக்கப் படுவார்கள் என்பது எமக்கு நன்றாகத் தெரியும். இவற்றை மனதில் வைத்து நாம் தொடர்ந்தும் அரசாங்கத்துடன் இருக்கத் தீர்மானித்தோம்." அயையாள அட்டைமசோத நிறைவேறியதற்குப் பின்னர் சமஷ்டிக் கட்சியுடைய அனுமதியோடு பிரதமர் மாவட்டசபை மசோதாவைக் கைவிடத் தீர்மானித்ததற்குப் பின்னர் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி பேசிய பேச்சு இது. இன்னமும் உங்கள் கருத்து இதுதானா? எதிர்க்கட்சியினரைப் பற்றிய உங்கள் எண்ணம் மாறிவிட்டதா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. அமிர்தலிங்கம்: அரசாங்கத்தைப் பற்றிய எங்களது அபிப்பிராயம் மாறிவிட்டது:

திரு. சிவசிதம்பரம்: அரசாங்கத்தைப் பற்றிய கவலை வேண்டாம். இந்நாட்டின் ஐக்கியத்தைக் குலைப்பதற்கும் இதுதான் சமயமென்பதையும் நீங்கள் தீர்மானித்து விட்டீர்களா?

### உங்கள் செயலுக்கு பதில் கூறுங்கள்

திரு: அமிர்தலிங்கம்: அரசாங்கம் ஐக்கியத்தைக் குலைக்கின்றது.

திரு. சிவசிதம்பரம்: அரசாங்கத்தைப் பற்றிக் கவலை வேண்டாம். உங்களுடைய செயலுக்கு தயவுசெய்து ...

என்ற ஒரே முறையையே அவர்கள் பின்பற்றுகிறார்கள்.

### கல்வியமைச்சரை தாக்குவதேன்?

கல்வியமைச்சர்மீது தாக்குதல் தொடுத்தார் வட்டுக்-காட்டைப் பிரதிநிதி. கல்வியமைச்சருடைய பல நடவடிக்கைகள்குறித்து மகிழ்ச்சியடையாதோர் பின் வாங்கில் பலர் உள்ளனர். ஆனால் கல்வியமைச்சர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டபோது அவரும் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினமும் பாராளுமன்றத்தில் என்ன கூறினார்கள் என்பதை வட்டுக்கோட்டைப் பிரதிநிதி மறந்து விட்டார்.. சாவகச்சேரிப் பிரதிநிதி தமிழில் கூறியதை இதோ நான் வாசிக்கிறேன். "அவர் ஒரு சிறு பிள்ளையின் உள்ளத்தையுடையவர். வஞ்சகமோ, சூதோ தெரியாதவர்." அவர்களுக்குப் பொருந்தாதபோது அது நையாண்டியாகிவிடுகிறது. அவர்களுக்குப் பொருந்துகிறபோது அது உண்மையாகிவிடுகிறது.

வட்டுக்கோட்டைப் பிரதிநிதிசொன்னதென்ன? அவர்கள் அரசாங்கத்திலிருந்து வெளிறேறியபின்பு ஆனால் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிப்பதற்குத் தீர்மானிக்காதபோது, வட்டுக்கோட்டைப்பிரதிநிதி 'தமிழ் மக்களைப் பாதிக்காத எல்லா விவகாரங்களிலும் நாங்கள் அரசாங்கத்தை ஆதரிப்போமென முடிவுசெய்துள்ளோம்' என்றுகூறினார்.

கல்வியமைச்சரின் மீது நம்பிக்கை தெரிவிப்பது தமிழ்மக்களது நலன்களைம் பாதிக்காது என்று அவர்கள் அச்சமயம் நினைத்தார்கள். பிரேரணைக்கெதிராக வாக்களித்தார்கள். இன்று என்ன நடந்துவிட்டது? கல்வியமைச்சர் மீது கண்டபடி தாக்குதல் தொடுக்கிறார்கள்! கல்வியமைச்சரோடு எங்களுக்கு அபிப்பிராயப் பேதங்களிருந்தன. எனினும் நாங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணைமீது பேச விரும்பவில்லை நாம் அரசாங்கப் பாராளுமன்றக் குழுவின் ஒரு பகுதியாக இருந்தமையால் அரசாங்கத்தோடு வாக்களித்தோம்.

# ஐயாறன் எழுதுவது

மேற்கு வங்காள சட்டசபையிலே சுமார் மூவாயிரம் பொலிசார் புகுந்து மந்திரிகள், மெம்பர்கள், பத்திரிகைக்காரர்கள் எல்லாரையும் தாக்கி அட்டகாசம் செய்து, நாசங்கள் விளைவித்துள்ளார்கள். உலகிலே எங்காவது இப்படி நடந்ததுண்டா?

சட்டசபையிலே ஏதும் கலாட்டா நடந்தால் பொலிசார் புகுந்து அங்குஒழுங்கை நிலைநாட்டுவதுண்டு. ஆனால் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பொலிசாரே சட்டசபைக்குள் நுழைந்து இப்படிச் செய்வதாயின்......!

ஆனால் பொலிசார் இவ்விதம் ஆத்திரப்படக்காரணமுண்டு. கல்கத்தாவுக்குப்பக்கத்திலே பணக்காரவிவசாயிகளின் தானியங்களைச் சூறையாடும்படி குடியானவர்களை சிலர் தூண்டி விட்டுக் கிளர்ச்சி செய்யவே, அமைதியை நிலைநாட்ட பொலிசார் அங்கு சென்றதாகவும், அச்சமயம் கூட்டத்திலிருந்து யாரோ சுட்டதில், ஒரு பொலிஸ்காரர் மாண்டார். இருவருக்குக் காயம். அரசியல்வாதிகள் இதற்குக் காரணமென்று நினைத்து, பொலிசார் ஆத்திரமடைந்து, இறந்த பொலிஸ்காரரின் சவத்தை ஊர்வலமாகக் கொண்டுவந்து, வழியிலே சட்டசபைக்குள் புகுந்து தாக்கியுள்ளதாகத் தெரிகிறது.

0 0 0

இந்தச் சம்பவம் வங்க அரசாங்கத்தை மட்டுமன்றி, ஜனநாயகத்தையே ஒரு கலக்குக் கலக்குவதாகும். தங்கள் ஆட்சிக்கு விரோதமாக யாரோ செய்த சதிதான் இது என்றும், இது பற்றிக் கடுமையான நடவடிக்கை எடுப்பதென்றும் மந்திரிசபை தீர்மானித்துள்ளதாம்.

பொலிசார்மீது நடவடிக்கை எடுப்பதுடன் இந்தப் பிரச்னை தீராது. அவர்களுக்கு மாறாக எடுக்கும் நடவடிக்கைகள் வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவது போலுமிருக்கும். இதற்கு அடிப்படைக் காரணங்களைக் கண்டு அவற்றைத் தீர்க்கமுற்பட வேண்டும்.

வங்காளத்திலே பொதுவாக சட்டம் ஒழுங்கு நிலைமை மிக மோசமாகியுள்ளது. சில வாரங்களுக்கு முன் கல்கத்தாவிலே ஒருகலை நிகழ்ச்சி நடக்கையில், மின் விளக்குகள் அணைக்கப்பட்டு, பெண்கள் தாக்கப்பட்டு காலித்தனங்கள் பல நடந்துள்ளன. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். கவிஅரசர் தாகூர், அரவிந்தர், நேதாஜி இவர்கள் அவதரித்த வங்கத்திலா இப்படி? அவர்களது ஆவி இதையெல்லாம்கண்டு என்ன பாடுபடுமோ?

அங்கு நடப்பதைப் பார்க்கையில், இலங்கையிலுள்ள நாம் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் என்பதை உணரலாம்.

0 0 0

தமிழகத்திலே தி. மு. க. வுக்குள்ளாக பிளவு ஏற்படுமென்றஆபத்து சுமுகமாகத் தவிர்க்கப்பட்டுவிட்டது முதல்வர் கருணாநிதியை கட்சியின் தலைவராகவும், முன்னாள் அமைச்சர் நெடுஞ்செழியனைக் காரியதரிசியாகவும் தெரிவு செய்து, இந்த நெருக்கடியைக் கட்சியின் மேலான நன்மையை முன்னிட்டு வெற்றிகரமாகச் சமாளித்துள்ளனர். கருத்து வேற்றுமை எவ்வளவு பெரிதாக இருப்பினும், மனமுண்டானால் வழியுண்டு. இதனால் இரு தலைவர்களும், பொது நன்மையை முன்னிட்டு விட்டுக்கொடுத்து இனி ஒத்துழைப்பதாயின் கட்சிக்கு மட்டுமன்றி, தமிழக மக்களுக்கும் அது நன்மையாகும்.

0 0 0

நாயினுங் கடைப்பட்டேனை நன்னெறி காட்டி
ஆண்டாய், ஆயிரமரவ
யார்த்த அமுதனே அமுதமொத்து, நீயுமென் நெஞ்சினுள்ளே நிலாவினாய் நிலாவி
நிற்க, நோயவை சாருமாகில் நோக்கி நீ அருள் செய்வாயே.

— அப்பர் சுவாமிகள்

### படகுசேவை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கிராமசபைஉறுப்பினர் திரு வி. சுப்பிரமணியம் திரு.நா இலட்சுமணராசா உட்பட பலர் பேசினர்.

நேற்றைய தினம் சுமார் 300 பிரயாணிகள் போககுவரத்து வசதியிலலாததால குறிகட்டுவான் துறைமுகத்தில் தங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இரவு வேளையில இவர்கள் தங்குவதற்கு ஏற்ற இடமின்றி மிகவும் கஷ்டப்பட்டனராம்

### காரைநகர்.....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நாட்களாக வெறிச்சோடிக் கிடக்கின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதிய புகாரும் கிளம்பியுள்ளதால், இந்தத் தவறைத்திருத்திக்கொள்ள உடன் இந்தியாவுக்கு அமைச்சர் செல்லுவதாயின் அது சரியான காரியமே. தவறுகள் செய்வது மனித சுபாவம். அதை சுட்டிக்காட்டியதும் திருத்திக்கொள்வது பொறுப்புள்ளவர்களின் கடமை.

ஆனல் இது கல்வி அமைச்சர் உள்ளிட்டு அரசாங்கத்துக்கு பலவிதங்களில் பாடம் புகட்டுவதாக இருக்கவேண்டும். உயர்தரக்கல்விபயில, தமது புதல்வியைவிட, அதிக தகுதியுள்ளவர்களுக்கு இலங்கையில் வசதியில்லாமலுள்ளதென்பதையும், இதனல் பல்கலைக்கழகம் ஆரம்பிக்க எவ்வளவோ நியாயமும், வாய்ப்புமிருப்பதால், அதை ஏற்படுத்த கல்விஅமைச்சரும் அரசாங்கமும் இனியும் தவக்கம் செய்ய முடியாது. இந்தியாவிலிருந்து ஏமாற்றத்துடன் திரும்பிவரும் செல்வி சகிதாவும், அவரைப்போல் இலங்கையிலுள்ள பல்லாயிரக்கணக்கானவரும்தங்கள் நாட்டிலிருந்தே உயர் கல்வி பெற நியாயமான வாய்ப்பை மறுப்பது, அவர்களுக்குச் செய்யும் பெரும் பாவமாவதுடன் நாட்டின் அபிவிருத்தியையும் தடைசெய்வதாகும்.

# அத்தியாவசியபொருட்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிஸ்கற் ஆகியவற்றின்விலை 10 வீதத்திலிருந்து 3 சதமாக குறைக்கப்படுகிறது.

## உயர்வு

தொலைபேசித் தொடர்பு கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. 15சதத்திலிருந்து 20 சதமாக இந்தக் கட்டணம் உயர்த்தப் பட்டுள்ளது. இதனல் 60 லட்சம் ரூபாயை வருமானமாக அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

ஸ்கூட்டர், மோட்டார் வாகனங்களின் விலைகளும் உயர்கின்றன. ஸ்கூட்டர்களுக்கு 5 வீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கும் மோட்டார் வாகனங்கள் 5 வீதத்திலிருந்து 25 வீதத்திற்கும் உயர்த்தப்பட்டுள்ளன. மின்சார விசிறிகளுக்கும் வரி உயர்த்தப்பட்டுள்ளன.

வானெலி உபகரணங்கள், வானெலிகள், குளிர்சாதனப் பெட்டிகள், பருத்தியில்லாத் துணிகள் ஆகியவற்றிற்கும் வரிகள்உயர்த்தப் பட்டுள்ளன. வானெலிகள் 10 வீதத்திலிருந்து 20 வீதத்துக்கும் பருத்தியில்லாத் துணிக 10 வீதத்திலிருந்து 20வீதத்திற்கும் குளிர் சாதனப் பெட்டிகள் 10 வீதத்திலிருந்து 20 வீதத்திற்கும் வரிவிதிக்கப்பட்டுள்ளது.

கறுவா, ஏலம் போன்றவற்றிற்கு புதிய ஏற்றுமதித் தீர்வைகள் விதிக்கப்பட்டுள்ளன.

சிகரெட்டுக்கு புதிய உற்பத்தி வரி விதிக்கப்பட்டுள் இதன்மூலம் சிகரெட் உற்பத்தியாளர்களுக்கு 5 வீத வரியுப் விற்பனையாளர்களுக்கு ஒரு சதம்கூடுதலான வரியும் விதிக்கப் படுகிறது.

மீனவர்களுக்கு நன்மையளிக்கக் கூடிய விதத்தில் மீன்பிடிபடகுகளுக்கும் வலைகளுக்கும் உபகரணங்களுக்கும் வரிகுறைக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு அக்டோபர் 1ம் திகதியிலிருந்து வழங்கப் படவிருக்கும்சம்பள உயர்வுக்கு 12 கோடி 50 லட்சம் ரூபாய்செலவாகுமென கணக்கிடப்பட்டுள்ளது.

## யாருடையது?

மக்கள்வங்கி பாஸ்புத்தகமொன்றும் உறுதிகளும் செ. சோமசுந்தரம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் உரிய சான்றுகளுடன் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## கருத்தரங்கு

அளவெட்டி, சனி

சுன்னுகம் பட்டினசபையின் ஆதரவில், நடைபெற்றுவரும் கருத்தரங்கில் இம்மாதம் 5-ம்திகதி எம். கார்த்திகேயன் ''பூர்வீகஇந்தியவரலாறு'' என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வேண்டிவந்தது. பிடிவாதமாக அவர்களே நம்பிக்கை வைக்காத ஒரு சமஷ்டி அமைப்புக்கான கோரிக்கையை இச்சபையில் மீண்டும் மீண்டும் எழுப்புவதன் மூலமாக சபையின் இப்பக்கத்தைச்சேர்ந்த சகாக்களது அனுதாபத்தைமட்டுமல்லாமல இச்சபையின் எல்லாப்பகுதியினர்களது உணர்வுகளையும் விரோதித்துக் கொள்கிருர்கள்.

இந்தநாட்டின் முன்னேற்றத்துக்காக் இந்த நாட்டின் சுதந்திரத்துக்கா, இந்த நாட்டின் பொருளாதார வளத்துக்காக இந்த நாட்டின் மற்றெந்த சமூகத்தவர்களும் செலுத்தியுள்ள அளவுக்கு தமிழ் சமூகத்தவர்கள் தங்களது பங்கை செலுத்தியிருந்தும் இந்தநாட்டிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுதனித்து நிற்கிறது தமிழ்ச்சமூகம். காரணம் தமிழ்ச்சமூகத்தின் ஏகத்தனிமைப் பிரதிநிதிகளாகத் தங்களை சமஷ்டிக் கட்சியினர் கூறிக்கொள்வதுதான்.

## மீண்டும் மீண்டும் அதே வழியில்..

கடந்த சில வருடங்களாக சமஷ்டிக்கட்சி அங்கத்தவர்கள் இவ்விதமாகவே நடந்துகொள்வதைத்தான் நாம் கண்டுள்ளோம்.

சமஷ்டிக்கட்சியின் கடந்த சில ஆண்டுகால அரசியல் தமிழ்மக்களை எங்கே இட்டுச்சென்றுள்ளது என்று ஆறஅமர்ந்து யோசித்துப் பார்க்கவேண்டிய நேரம் இது. அவர்கள் சிந்திக்கவில்லையானல் அது அவர்களைப் பொறுத்த விஷயம். ஆனல் சிந்திக்கவேண்டிய வேளை நிச்சயமாகவந்துவிட்டது. இவ்விதமான அரசியல், தமிழ்மக்களை எங்கேனும் இட்டுச் சென்றுள்ளதா என்று தமிழ் மக்கள் சிந்திக்கத் தலைப்பட்டுவிட்டார்கள் என்பதைநான்சமஷ்டிக் கட்சி அங்கத்தவர்களுக்கு சொல்லிவைக்க விரும்புகிறேன்.

## தேர்தலுக்கு முன்பே சொல்லிவந்தோம்

''உங்களது சமஷ்டிக் கோரிக்கையை இது நாட்டைக் கூறுபோடுவதற்கான கோரிக்கை என்ற பயத்தை சிங்கள மக்கள் மத்தியிலே உண்டுபண்ணுவதற்காக அதிகாரவெறிகொண்ட சில அரசியல் வாதிகள் பயன்படுத்திக்கொள்கிருர்கள்'' என்பதை தமிழ் காங்கிரஸ் காரர்களாகிய நாங்கள் தேர்தலுக்கு முன்பாகவே சமஷ்டிக் கட்சியினருக்கு களது யோசனைக்கு அவர்கள் செவி மடுக்கவில்லை. பிரதமரோடு ஓர் ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டுள்ளதாக அவர்கள் கூறினர்கள். இப்பொழுது அவர்கள் பழைய இடத்துக்கே மீண்டும் திரும்பி விட்டார்கள். கடந்த காலத்தில் அவர்கள் செய்தது போலவே 'நாங்கள் துரோகமிழைக்கப்பட்டோம்' என்று பழையபடியும் மாரடித்து ஒப்பாரி வைக்கின்ருர்கள்.

''நாங்கள் அரசாங்கத்தை விட்டு விலகியபோது அதற்கான காரணத்தை வெளியிடவில்லை'' என்று வட்டுக்கோட்டை அங்கத்தவர் அவரது பேச்சில் பகிரங்கமாகவே கூறிவிட்டார். அவர் சொல்ல முற்பட்ட காரணங்களை இப்பொழுது நான் வெளியிடுகிறேன். ஏராளம் காரணங்களைக் கொண்டதொருநீண்ட குற்றச்சாட்டுப் பட்டியல் அது. தேர்தல் விஞ்ஞாபனத்தைப் போன்றது. வட்டுக்கோட்டை அங்கத்தவர் அவரது பேச்சில் கூறியதென்ன? வட்டுக்கோட்டை அங்கத்தவர் இச்சபையில் கூறிய அக்காரணங்களில் ஒன்றேனும் அவர்கள் அரசாங்கப் பாராளுமன்றக் குழுவை விட்டு விலகி மறுபக்கம் சேர்ந்த கடந்த மூன்று நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்குள் ஏற்பட்டதா என்று கேட்பது பொருத்தமானதே. இந்த நாட்டில் ஞாபகசக்தி என்பது குறைவுதான். எனினும் வட்டுக்கோட்டைப் பிரதிநிதியுடைய பேச்சில் காணப்படுவது போல் அது அவ்வளவு குறைவானதென்று நினைக்கவில்லை.

1968-ம் ஆண்டு பட்ஜட் விவாதத்தின் போது ஊர்காவற்றுறைப் பிரதிநிதியுடைய (திரு. வி. நவரத்தினம்) பேச்சுக்கு-அப்பேச்சில் அவர் சென்றவாரம் வட்டுக்கோட்டைப் பிரதிநிதியுடைய பேச்சில் அடங்கியவை போன்றே நீண்ட குற்றப் பட்டியலொன்றை வாசித்திருந்தார். வட்டுக்கோட்டைப் பிரதிநிதி பதிலளித்துப் பேசுகையில் கூறியது இதுதான்.

இது தமிழில் காணப்படுகிறது. அவர் சொன்னர்:

''எமது இந்தத் தீர்மானம் இரண்டு முக்கிய நோக்கங்களுக்காக எடுக்கப்பட்டது. முதலாவதாக, கௌரபிரதம அமைச்சர் அவர்களின் தலைமையில் இந்த நாட்டில் கட்டியெழுப்பப்பட்ட ஒற்றுமையை, வகுப்பு வெறியால் சிதைத்தொழிக்க முற்பட்ட எதிர்க் கட்சியினர் சதிக்கு இந்த நாட்டைப் பலியாக்கக்

...

சாங்கம் ஐக்கியத்தைக் குலைக்கின்றது.

திரு. சிவசிதம்பரம்: அரசாங்கத்தைப் பற்றிக் கவலை வேண்டாம். உங்களுடைய செயலுக்கு தயவுசெய்து நீங்கள் பதில் கூறுங்கள். அரசாங்கம் பதில் சொல்ல வேண்டிய நேரம் வரும்போது அரசாங்கம் பதில் கூறும். உங்கள் செயலுக்கு நீங்கள் பதில் சொல்லுங்கள்.

திரு. அமிர்தலிங்கம்: நீர் யாருக்காக பதில் சொல்கிறீர்?

திரு. சிவசிதம்பரம்: என்னுடைய கட்சிக்காக நான் பதில் சொல்கிறேன்.

ஒன்றரை மணித்தியாலமாக அவருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தோம். அவரது பேச்சு யாழ்ப்பாணத்திலும் கேட்குமா என்று நான் சந்தேகித்தேன், அவ்வளவு சத்தத்தோடு அவர் பேசினர்.

இவை யாவும் பொருத்தமானகேள்விகளே. உங்களது மனம் மாறும்வகையில் கடந்த நான்கு மாதங்களாக என்ன நடந்துவிட்டது? அது மட்டுமல்ல. 1969-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 2-ம் திகதி அதாவது அவர்கள் அரசாங்கத்தைவிட்டு வெளியேறுவதற்குத் தீர்மானித்த உடுவில் மகாநாடு கூடுவதற்கு ஒரு சில வாரங்களுக்கு முன்பாகத்தான் உள்ளூராட்சி அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது வட்டுக்கோட்டைப் பிரதிநிதி கூறினர்.

''அமைச்சரை வரவேற்றுப் பேசுகையில், தேசிய அரசாங்கத்தின் மீது தமிழ் மக்களுக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு'' என திரு. அமிர்தலிங்கம் கூறினர்

அந்தச் செய்தி மேலும் கூறுகிறது:

''தமிழ் மக்களால் சிங்கள் பிரதேசங்களில் சமாதானமாகவாழவும், தொழில் புரியவும் இப்பொழுதுதான் முடிகிறது என்று அவர் கூறினர்.''

1969ம் ஆண்டு பெப்ரவரி 2-ம் திகதி யளவில் சொன்ன வார்த்தைகள் இவை.

அரசாங்கத்தை விட்டு அவர்கள் வெளியேறுவதற்கான காரணங்கள் வெட்ட வெளிச்சமானவை. நான் சொன்னது போல், கடந்த சில ஆண்டுகளாக நாம் கண்டதுபோல் தேர்தலின் போது அவர்கள் என்ன சொல்லுகிருர்கள். தேர்தலுக்குப்பின் என்ன நடக்கின்றது, அடுத்ததேர்தல்வரும் சமயம் என்ன நடக்கின்றது

...

யில்லாப் பிரேரணைமீது பேச விரும்பவில்லை நாம் அரசாங்கப் பாராளுமன்றக் குழுவின் ஒரு பகுதியாக இருந்தமையால் அரசாங்கத்தோடு வாக்களித்தோம்.

அரசாங்கத்தைப் பாதிக்கும் விவகாரங்களில் ஒன்பது மாதங்களுக்கு முன்னல் இந்த நிலையைக் கடைப்பிடித்த இக் கனவான்கள் தான் கல்வியமைச்சரின் பாரபட்சம் என்று சொல்லி தாக்குதல்களை தொடுக்கத் தொடங்கியுள்ளார்கள்.

## போதன மொழி பிரச்னையும், முடிவும்

இன்னெரு விடயம் குறித்து நான் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கு, குறிப்பாக பிரதமருக்குக் கூற விரும்புகிறேன். போதன மொழிப் பிரச்னைதான் அது. போதன மொழி விஷயத்தில் அரசாங்கம் ஒருவிதமுடிவும் எடுக்கவில்லையென, காரசாரமான விவாதத்தினபோது பிரதமர் கூறியதையிட்டு நான் வருந்துகிறேன். இப்பிரச்னை மீது அரசாங்கப் பாராளுமன்றக்குழு முடிவெடுத்ததென்பதை நான் பிரதமருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பல மணித்தியாலங்கள் கலந்தாலோசித்ததன் பின்பு போதன மொழி பெற்ருேரின் தாய் மொழியாக இருக்கவேண்டுமென்றும், முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் இதற்கு விதிவிலக்காக அவர்கள் விருப்பப்படி தெரிந்தெடுப்பதற்கு விடப்படுமென்றும் அரசாங்கப் பாராளுமன்றக் குழு முடிவெடுத்தது. பிரதமருக்கு ஞாபகமூட்டினல் அவர் அப்படியொரு முடிவு எடுக்கப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வார் என நான் நம்புகிறேன்.

உற்பத்தித் தொழில் அபிவிருத்தி விஷயத்தில் முழுப் பாரபட்சம் காட்டப்படுவது குறித்து வட்டுக்கோட்டைப் பிரதிநிதி பேசினர். நான் அதற்குப்பதில் சொல்லப் போவதில்லை. அரசாங்கப் பாராளுமன்றக்குழுவை சேர்ந்த வட்டுக்கோட்டைப் பிரதிநிதியே இப்பொழுது எதிர்க்கட்சியிலுள்ள வட்டுக்கோட்டைப் பிரதிநிதிக்குப் பதில் சொல்லச் செய்கிறேன். 1968ம் ஆண்டு பட்ஜட் விவாதத்தின்போது, ஊர்காவற்றுறைப் பிரதிநிதி மீண்டும் அதே போன்ற அபிப்பிராயங்களை வெளியிட்டபோது வட்டுக்கோட்டைப் பிரதிநிதி பின்வருமாறு கூறினர்.

...

நிலைமை மிக மோசமாகியுள்ளது. சில வாரங்களுக்கு முன் கல்கத்தாவிலே ஒருகலை நிகழ்ச்சி நடக்கையில், மின் விளக்குகள் அணைக்கப்பட்டு, பெண்கள் தாக்கப்

''முதிய அரசாங்கம் வகுப்புவாத ரீதியிலே இயங்கியதும், அபிவிருத்தித் திட்டங்களை வகுப்புவாத ரீதியிலே நடாத்தியதும் நாம் எல்லோரும் அறிந்ததே. 1957-ம் ஆண்டு இதே சபையிலே நான் எதிர்க்கட்சி ஆசனத்திலிருந்து கொண்டு வரவு செலவுத் திட்ட விவாதத்திலே பேசியபொழுது, அப்பொழுது இருந்த கைத்தொழில் அமைச்சரவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தது எனக்கு நல்ல ஞாபகமாக இருக்கிறது. காங்கேசன்துறைச் சீமெந்து தொழிற்சாலையின் இரண்டாவது மூன்ருவது சூளைகளை உடனடியாக ஆரம்பியுங்கள் என்று நான் அவருக்கு வேண்டுகோள் விடுத்தேன் அப்பொழுது கௌரவ வில்லியம் டி சில்வா கைத்தொழில் அமைச்சராக இருந்தார். அவர், நாங்கள் அடுத்த தொழிற்சாலையை அம்பலாங்கொடையிலே ஆரம்பிப்போமே தவிர யாழ்ப்பாணத்திலேயுள்ள தொழிற்சாலையை அபிவிருத்தி செய்ய மாட்டோம் என்று எங்களுக்குக் கூறினர். ஆனல் இன்று இந்த அரசாங்கம், சிம்மாசனப் பிரசங்கத்திலும் வரவு செலவுத் திட்டத்திலும் வெளியிட்டுள்ளபடி இரண்டாவ சூளையைப் பொருத்தியது மாத்திரமின்றி மூன்ருவது சூளையையும் ஆரம்பித்து காங்கேசன்துறையிலுள்ள சிமெந்துத் தொழிற்சாலையைப் பூரணத்துவமுடைய ஒரு தொழிற்சாலையாக நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய ஒரு தொழிற்சாலையாக-அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மிக மகிழ்ச்சியோடு கவனிக்கிறேம்.''

அதுமட்டுமன்று- முழு சாவகச்சேரி தொகுதிக்குமாக ஆனையிறவில் நிறுவப்பட்டுவந்த பெரும் உப்பளம் பற்றியும் அவர் பேசினர். இப்படிப் பேசியது மிக நீண்ட காலத்துக்கு முன்பாகவல்ல, 1968ல் தான்.

(தொடரும்)

## காரைநகர்.....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நாட்களாக வெறிச்சோடிக் கிடக்கின்றது.

## எங்கும் தாமதம்

பஸ்சேவையில்லாததால் கச்சேரி ஊழியர்கள் பலரும் தாமதமாகவே வேலைக்கு வருவதாக கச்சேரி உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவ மாணவிகள் பலரும் தவணைப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். மாணவர்கள் வீதியில் கூட்டம் கூட்டமாக நடந்து செல்வதையும், சைக்கிள்களில் நடந்து செல்வதையும் அங்கும் காணக் கூடியதாகவிருக்கின்றது.

யாழ்ப்பாண நகரிலுள்ள பல தொழிற்சாலைகள், தியேட்டர்கள், ஆகியவற்றுக்குச் செல்வோர் தொகையும் குறைந்துள்ளதாம்.

## இவர்கள் பஸ்ஓட்டினர்

இ. போ. ச. அலுவலக ஊழியர்களும், பரிசோதகர்களும், மற்றும் சில ஊழியர்களும் நேற்று பஸ்களை ஓட்டிச்சென்றதாக வேலை நிறுத்த ஊழியர்கள் தெரிவித்தனர், வேலை நிறுத்தத்தை சமரசமுயற்சிகளால் உடனடியாக நிறுத்தாவிட்டால கிளிநொச்சி, முல்லைத்தீவு டிப்போ ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில குதிக்கலாம் என்று அறியப்படுகின்றது.

தனிப்பட்ட வான்கள், லொறிகள், கார்கள் ஆகியவற்றிலேயே மக்கள் பிரயாணம் செய்துகொண்டிருக்கிருர்கள். (கா. நி.)

## ஆலயவீதி திருத்த ரூபா 10 ஆயிரம்

அளவெட்டி. சனி

புன்னலைக்கட்டுவன் நாச்சிமார் கோவில் வீதி சீரமைப்புக்கென உள்ளூராட்சி அமைச்சு ரூபா 10 ஆயிரம் வழங்கியுள்ளது.

ஏழாலைக் கிராமசபைத் தலைவர் திரு. சிவகுரு மேற்படி ஆலயவீதி சீரமைப்புக்கு நிதி ஒதுக்கித் தரும்படி யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி, பொன்னம்பலத்திடம்கேட்டிருந்தார். அவர் அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியதை தொடர்ந்தே இந்நிதி கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org